பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 24 செவ்வாய்க்கிழமை 09.03.2021 கதிர் 124

இனிது ரகசியம் அல்ல!

கொரோனாத் தொற்றைத் தடுப்ப தற்கான கொவிட் தடுப்பூசிகளை மிக சாதனை அளவில் உற்பத்தி செய்து உலகம் முழுவதும் விநி யோகிக்கும் தனது நடவடிக்கை யின் மூலம் சர்வதேச தொடர்பாட லில் பல தப்புகள் மத்தியிலும் இந் தியா இப்போது பக்கம்02

காரைநகர் டிப்போ சாரதிகள், நடத்துநர்கள், காப்பாளர்கள் உட்பட

# யாழ்ப்பாணத்தில் நேற்று மாத்திரம் 22 பேருக்குக் கொரோனாத் தொற்று

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 22 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 8 பேர் இ.போ.ச. காரைநகர் சாலையில் பணியாற் றும் சாரதிகள், நடத்துநர்கள், காப்பாளர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மருத் துவபீட ஆய்வுகூடத்தில் 387 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டன. இவர்களில் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 382 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். 2

# வடக்கு காணி ஆணைய ஆவணங்கள் 'அ'புரவுக்கு அள்ளிச் செல்லப்பட்டன!

## நேற்று மாலையில் ரகசிய 'ஒப்பரேஷன்' இனி அங்கிருந்துதான் நடவடிக்கைகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 09

வடக்கு மாகாண காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆவ ணங்கள் அனைத்தும் நேற்று மாலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் இயங்கிய அதன் அலுவலகத்திலிருந்து அதிரடி இரகசிய 'ஒப்பிரேஷன்' மூலம் அள்ளி எடுக்கப்பட்டு அநுராத புரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. 2

## வடக்கின் 3 தீவுகளும் சீனாவுக்கே; இந்தியாவுக்குத் தாரைவார்க்கோம்

### அமைச்சர் விமல் திட்டவட்டம்



வடக்கு மாகாணத்திலுள்ள நயி னாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலை தீவு ஆகிய மூன்று தீவுகளையும் இந்தியாவிடம் ஒப்படைக்க அரசு ஒரு போதும் தயாரில்லை என்று அமைச் சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

## திடீர் மின்சாரத் தடையால் நேற்றிரவு இருளில் மூழ்கியது வடக்கு மாகாணம்

### ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை எழுதும் மாணவர்கள் இடர்பாடு

(ந.லோகதயாளன்)

அநுராதபுரம் புதிய உப மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட் பக் கோளாறு காரணமாக வடக்கு மாகாணத்துக்கான மின்சார விநியோகம் நேற்றிரவு 7 மணி முதல் இரு மணி நேரம் தடைப் பட்டது.

இதேநேரம், வாழைச்சேனை, ஹபரணை, பொலனறுவை மற் றும் வவுனியா ஆகிய 2

## பருத்தித்துறையில் கொரோனாவால் வயோதிபப் பெண்ணொருவர் மரணம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பருத்தித்துறையில் கொரோனா வைரஸ் தொற்றால் வயோதிபப் பெண்ணொருவர் நேற்று உயி ரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தும்பளை தெற்கைச் சேர்ந்த 75 வயதுடைய பெண்ணே இவ் வாறு உயிரிழந்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

கொரோனா வைரஸ் தொற் றுக்கு உள்ளாகிய 11

## மக்கள் வங்கி உதவி முகாமையாளர் நல்லூர் விபத்தில் பரிதாப மரணம்!

### மின்தடைப்பட்ட வேளையில் துயரம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நல்லூரில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 2

## இலங்கையில் நான் கண்காணிக்கப்படுகின்றேனா?

### கனேடியத் தூதுவர் கேள்வி; பொலிஸ் பேச்சாளர் மறுப்பு



இலங்கையில் நான் கண் காணிக்கப்படுகின்றேனா? என்று இலங்கைக்கான கனேடியத் தூது வர் டேவிட் மெக்கினன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளி யிட்டே, அவர் இவ்வாறு கேட்டுள் ளார்.

இலங்கைக்கான பங்களா தேஷ் தூதுவருடன் நடைபெற்ற தனிப்பட்ட சந்திப்பு தொடர்பான தகவல்கள் கொழும்பு ஊடகங் களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன எனவும் கனேடியத் தூதுவர் குற் றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களில் 2

## வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பலருக்கும் வருகிறது இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண கல்வி அமைச் சிற்கு உட்பட்ட பல வலயக் கல் விப் பணிப்பாளர்களிற்கு மாகாண மட்ட இடமாற்றம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை 2

## மேயர் பதவியில் மணி நீடிப்பாரா? 17 ஆம் திகதி தீர்ப்பில் தெரியவரும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனைக் கட்சியில் இருந்து நீக்கிய விடயத் தில் மாகாணக் குடியியல் மேன் முறையீட்டு நீதிமன்றின் 2

## தேவையற்ற போராட்டங்களை உடன் நிறுத்தவேண்டும் தமிழர்

### மிரட்டுகின்றது கோட்டா அரசு



ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையிலான அரசு, தமிழ் மக்களுக்கு எதிரான அரசு அல்ல. இந்நிலையில், அரசுக்கு எதிராகவும், அரசின் பொறுமை யைச் சோதிக்கும் வகையிலும் ஐ.நா.விடம் நீதி கோரி வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தற்போது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஐ.நா.வோ அல் லது சர்வதேச நாடுகளோ தமிழர் களுக்கு ஒருபோதும் 11

## போரில் காணாமல்போனோர் தமிழீழ விடுதலைப்புலிகளே!

### தமிழ் மக்கள் அல்லர் என்கிறார் வீரசேகர

வடக்கு, கிழக்கில் போரின்போது தமி ழீழ விடுதலைப்புலிகளும், அவர்களின் நெருங் கிய சகாக்க ளுமே காணாமல்போயுள் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முக்கியத்துவம் பெறுகின்றது.

பிரதமர் நரேந்திர மோடியின் கொவிட் தடுப்பூசி இராஜதந்திரம் சர்வதேச அரசியலில் இப்போது பிரதான பாத்திரம் செலுத்துகின்றது.

கொவிட் தடுப்பூசி இராஜதந்திரத்தை வைத்து இந்தியா சர்வதேச அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்றால், அதே தடுப்பூசி தந்திரோபாயத்தை வைத்து உள்ளூரில் அரசியல் செய்ய முயற்சித்த ராஜபக்ஷ அதிகாரபீடம் இப்போது மூக்குடைபடும் நெருக்கடியில் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

சமூகத்துக்கு கொவிட் தடுப்பூசி விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் பதினைந்து லட்சம் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு, ஒரு தடுப்பூசி 5.25 அமெரிக்க டொலர் என்ற கணக்கில் இந்தியாவின் சேரம் இன்ஸ்ரிரியூட்டிற்கு இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் முழு நிதியையும் செலுத்தி 'ஓடர்' கொடுத்தது.

அதன்படி முதல் தொகுதியாக ஐந்து லட்சம் 'டோஸ்'கள் பெப்ரவரி கடைசி வாரம் வந்து சேர்ந்தது.

பதினைந்து லட்சம் டோஸ்கள் என்றால் – ஒருவருக்கு இரண்டு டோஸ்கள் என்ற அடிப்படையில் – ஏழரை லட்சம் பேருக்கு அதனை வழங்க முடியும் எனக் கணக்கிடப் பட்டது.

அதனடிப்படையில் இப்போது முதலில் வந்த ஐந்து லட்சம் டோஸ்களை சமூகத்தில் உள்ளோருக்கு விநியோகிக்கும் நடவடிக்கை பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. மொட்டுத் தரப்பின் உள்ளூர் பிரமுகர்களை முன்னிறுத்தி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் கடந்த வார இறுதியில் இந்தியாவின் சேரம் இனஸ்ரிரியூட்டின் தரப்பில் இருந்து அதிர்ச்சி தரும் தகவல் வந்திருக்கின்றது.

ஏற்கனவே வழங்கப்பட்ட ஐந்து லட்சம் டோஸ் தடுப்பூசிகள் போக எஞ்சிய பத்து லட்சமும் இம்மாத நடுப்பகுதியில் அல்லது அடுத்த மாதத்தில் வந்து சேரும் என்றே எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இப்போது கொடுத்து முடிக்கப்படும் ஐந்து லட்சம் பேருக்கு அடுத்த டோஸை இரண்டாவது கட்டத்தில் வரும் பத்துலட்சம் டோஸ்களில் இருந்து பெற்றுக் கொடுக்கலாம் என உத்தேசிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்தியாவின் சேரம் இன்ஸ்ரிரியூட் திடீரெனக் கைவிரித்து விட்டது. இரண்டாவது தொகுதியை எப்போது தரலாம் என்பதை ஏப்ரல் நடுப்பகுதியில்தான் கூறமுடியும் எனத் தெரிவித்துள்ள அந்த நிறுவனம், தேவையானால் மருந்து 'ஓடரை' ரத்துச் செய்து, தரப்பட வேண்டிய எஞ்சிய தடுப்பூசிகளுக்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்தை அப்படியே திரும்பித் தரலாம் எனக் கூறியுள்ளது.

பணத்தைத் திரும்பப்பெற்று, சற்றுக் கூடிய விலையில் இதே ரக மருந்தை – பிரிட்டனின் ஒக்ஸ்போட் ரகத் தடுப்பூசியை – பிரிட்டனில் இருந்தும் கூட பெறமுடியும். ஆனால் அதற்கும் காலம் எடுக்கும்.

அப்படிக் காலம் எடுத்தால் முதல் கட்டமாகத் தடுப்பூசி செலுத்திய – இப்போது செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற – ஐந்து லட்சம் பேருக்கும் இரண்டாம் கட்டத் தடுப்பூசி கொடுப்பதற்கான காலகட்டம் தாண்டிவிடும். முதல் கட்டத் தடுப்பூசியின் பயன் அப்படியே இழந்துவிடும். முதற்கட்டமாக வந்து ஐந்து லட்சம் தடுப்பூசியை அரைவாசியாகப் பிரித்து இரண்டரை லட்சம் பேருக்கு அதனை வழங்கியிருந்தால், எஞ்சிய இரண்டரை லட்சத்தையும் பாதுகாப்பாகப் பேணி, அவர்களுக்கே இரண்டாம் கட்டமாக வழங்கி, அவர்களின் தடுப்பூசித் தகைமையை முழுமையாகப் பூர்த்தி செய்திருக்க முடியும்.

இரண்டாம் கட்டம் உரிய காலத்தில் வந்து சேரும் என்ற நம்பிக்கையில் முதலில் வந்த ஐந்து லட்சம் தடுப்பூசியையும் முதலாம் கட்டமாக ஐந்து லட்சம் பேருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்து விட்ட நிலையில், இப்போது அதே ரக ஊசி இரண்டாம் கட்டத்துக்கு உரிய காலத்தில் கிடைக்காது என்ற தகவல் பேரதிர்ச்சியைத் தந்திருக்கின்றது.

முதல் கட்டமாக இந்தத் தடுப்பூசியைப் பெற்ற ஐந்து லட்சம் பேருக்கும் அந்தத் தடுப்பூசியின் பலன் முழுமையாகக் கிடைக்காமல், அவமாகிப்போகும் ஆபத்து, கொழும்பு நிர்வாகத்தின் தலையைச் சுற்ற வைத்திருக்கின்றது.

கொவிட் தடுப்பூசி இராஜதந்திரத்தில் இந்தியா சர்வதேச ரீதியில் கொடி கட்டிப் பறக்கின்றது. இலங்கை, உள்ளூரிலேயே அந்தத் தந்திரோபாயத்தில் மூக்குடைபட்டு நிற்கின்றது. அவ்வளவுதான்.

– மின்னல் –

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவர்களில் 21 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைசிற்றூழியர் ஒருவருக்குக் கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவர் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டவர்.

யாழ். மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கார்கில்ஸ் கட்டடத் தொகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, இ.போ.ச. காரைநகர் சாலையைச் சேர்ந்த 90 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது. இவர்களில் 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் சாரதிகள் மூவர், நடத்துநர்கள் மூவர் மற்றும் காப்பாளர்கள் இருவர் அடங்குகின்றனர்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

இதேவேளை, உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் – என்றார்.

## திடீர் மின்சாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உபமின் நிலையங்களிலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படும் பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டது என மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

இதனால், அநுராதபுரம் மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டது.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்கள் முழுமையாகவும், மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளும் மின்சாரத் தடையால் இருளில் மூழ்கியன. இதேநேரம் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் மின்சாரம் தடைப்பட்டது.

நேற்றிரவு ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக தற்போது ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிக்கொண்டிருக் கும் மாணவர்கள் பலத்த இடர்பாடுகளைச் சந்தித்தனர்.

## போரில் காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ளனர். தமிழ் மக்கள் எவரும் காணாமல் போகவில்லை.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைச் சமர்ப்பித்துள்ள நாடுகள் இவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## மக்கள் வங்கி உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை உதவி முகாமையாளர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் தலையில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

மின்தடைப்பட்டிருந்த வேளையில் விபத்து இடம்பெற்றது என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் நல்லூரில் வசிப்பவருமான சிறிஸ்கந்தராஜா பகீரதன் (வயது – 40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் அண்மையில் சுன் ணாகம் மக்கள் வங்கிக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மேயர் பதவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீர்ப்பு எதிர்வரும் 31ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

அத்தீர்ப்பின் அடிப்படையில் மணிவண்ணன் மேயர் பதவியில் தொடர முடியுமா என்பது தீர்மானிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இதே போன்ற இன்னொரு வழக்கில் வரும் 17 ஆம் திகதி இதே நீதிமன்றம் வழங்கப் போகும் தீர்ப்பே, அதன் இரண்டு வாரங்களின் பின்னர் மணிவண்ணன் வழக்கிலும் வழிகாட்டலாக இருக்கும் என்பதால் மணிவண்ணன் மேயர் பதவியில் தொடர்வதற்கு இடைஞ்சல் இருக்குமா என்பது பெரும்பாலும் வரும் 17 ஆம் திகதியே தெளிவாகிவிடும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினரான வி.மணிவண்ணன் உட்பட யாழ் மாநகர சபையின் உறுப்பினர்கள் நால்வர், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் இருவர் என ஆறு பேரை ஏற்கனவே கட்சியில் இருந்து நீக்கியதான அறிவித்தலை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்திருந்தார். அவ்வாறு கட்சியிலிருந்து வெளியேற்றிய கடிதத்திற்கு அமைய அடுத்த 21 நாள்களிற்குள் உள்ளூராட்சி உறுப்பினர் பதவியை இழந்தமை தொடர்பான அரச இதழ் பிரசுரிக்கப்படும் என தெரிவத்தாட்சி அலுவலர் மேற்படி மணிவண்ணன் உள்ளிட்ட ஆறு உள்ளூராட்சி உறுப்பினர்களிற்கும் கடிதம் மூலம் அறிவித்தார்.

இந்த ஆறு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தெரிவத்தாட்சி அலுவலரின் இந்த முடிவிற்கு இடைக்காலத் தடைகோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரணைக்கு ஏற்ற மாவட்ட நீதிமன்றம், இந்த ஆறு உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நீக்கும் முடிவிற்கு இடைக்காலத் தடை விதித்தது. அதனால் மணிவண்ணன் உட்பட அறுவரும் தொடர்ந்து உள்ளூராட்சி உறுப்பினர் பதவியில் நீடிக்கின்றனர்.

இவ்வாறு மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்கால தடைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் மாகாண குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்களில் வி.மணிவண்ணனிற்கு எதிரான மனுவின் விசாரணை நேற்றைய தினம் நீதிபதிகளான ஏ.எச்.எம்.மனாப் மற்றும் சசி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தீர்ப்பிற்காக வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேநேரம் மாநகர சபையின் மற்றுமோர் உறுப்பினரான மயூரனை இடைநிறுத்திய வழக்கின் கட்டளை 17 ஆம் திகதி வழங்கப்படவிருக்கின்றது. அது மணிவண்ணன் வழக்கின் கட்டளைக்கு வழிகாட்டியாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

எஞ்சிய நால்வரின் வழக்குகள் எதிர்வரும் 24ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

## வடக்கின் 3 தீவுகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதியின் பிரகாரம் குறித்த மூன்று தீவுகளிலும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. சீன நிறுவனத்துக்கே இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதியையும் மீறி மூன்று தீவுகளுக்கான திட்டங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோருவது சிறுபிள்ளைத்தனமானது.

வெளிநாடுகள் திட்டங்களுக்கான கோரிக்கையை இலங்கையிடம் விடுக்க முடியும். ஆனால், அது தொடர்பில் அமைச்சரவைதான் இறுதி முடிவெடுக்கும். அமைச்சரவை எடுக்கும் தீர்மானத்தை உதாசீனப்படுத்தும் வகையில் எந்தத் தரப்பும் கருத் துக்களை வெளியிட முடியாது – என்றார்.

## வடக்கு காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வடக்கு மாகாண காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் அலுவலகம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் இயங்கி வந்தது.

இதன் ஆவணங்கள் அனைத்தையும் அநுராதபுரம் அனுப்புமாறு அறிவிக்கப்பட்ட நிலையில. அதற்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியதோடு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்த அலுவலக ஆவணங்களை எடுத்துச் செல்லக்கூடாது எனவும் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றிய பின்பும் கடந்த 4 ஆம் திகதி இந்த ஆவணங்களை ஏற்றிச் செல்லப்படவிருந்த சமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரிடம் ஓர் மனுவும் கையளித்தனர். மனுவைப் பெற்றுக்கொண்ட மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் இந்த விடயம் ஆணைக்குழுவின் முடிவு, அதனால் தாம் உடனடியாக ஏதும் செய்ய முடியவில்லை எனப் பதிலளித்தார்.

இந்த நிலையில் நேற்று மாலை இரகசியமான முறையில் ஆவணங்கள் அனைத்தும் ஆணைக்குழுவின் வாகனத்தில் அநுராதபுரம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வடக்கில் உள்ள – காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் – அரச காணிகளைத் தனியாருக்கு பங்கிட்டு வழங்கும் நடவடிக்கை இனி அநுராதபுரத்தில் இருந்து முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வலயக் கல்விப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மேற்கொண்டுள்ளதாக அறியவருகின்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது 12 கல்வி வலயங்கள் உள்ளன. அதேநேரம் புதிதாக 13 ஆவது வலயத்திற்கான அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பின்புலத்திலேயே தற்போது பணியில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களை இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிகின்றது.

தற்போது பணியில் உள்ள 12 வலயக் கல்விப் பணிப்பாளர்களில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் இந்த மாதமும் வலிகாமம் கல்விப் பணிப்பாளர் அடுத்த மாதமும் ஓய்வு பெறும் அதே நேரம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரும் குறுகிய காலத்தில் ஓய்வு பெறுவதனால் இந்த மூன்று வலயக் கல்விப் பணிப்பாளர்களும் இடமாற்றப் பட்டியலிற்குள் உள் அடக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது

இவற்றின் அடிப்படையில் வடக்கின் ஏனைய 9 வலயக் கல்விப் பணிப்பாளர்களில் இருந்து அதிகமானோரை இடமாற்றம் செய்யும் நடவடிக்கை மாகாண ஆளுநரின் ஒப்புதலுடன் விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது எனத் தெரிகின்றது.

இதேநேரம் இந்த இடமாற்ற ஏற்பாட்டினை அறிந்துகொண்ட இரு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது இடமாற்றத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு விண்ணப்பித்துள்ளனர். இருந்தபோதும் விண்ணப்பித்தவர்கள் கட்டாயம் இடமாற்றப்படவேண்டிய பட்டியலில் உள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

## இலங்கையில் நான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியான செய்தியில் கனேடிய மற்றும் பிரிட்டன் தூதுவர்கள் இலங்கைக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், தென் கொரிய தூதுவரைச் சந்தித்ததும், ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட இரண்டு சந்திப்புகள் தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ள நிலையில், தாம் இலங்கையில் கண்காணிக்கப்படுகின்றோமா? என்ற சந்தேகம் தூதுவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த தகவலை மறுத்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண, இலங்கையில் தூதுவர்கள் அவ்வாறு கண்காணிக்கப்படுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீது தீவிர கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் இருக்கின்றன என்று ஐரோப்பிய ஒன்றியம் ஐ.நாவின் 46ஆவது அமர்வில் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்கள் அழிந்தாலும் பரவாயில்லை புலிகள் அழியவேண்டும் என்றவர் சம்பந்தன்!

## யுத்தக் குற்றங்களுக்காக அவரிடமும் விசாரணை தேவை!

### வலியுறுத்துகின்றார் ஆனந்தசங்கரி

யுத்தக் குற்றங்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் முதலில் விசாரிக்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கடந்த சனிக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கூட்டமைப்பின் அறிக்கை சர்வதேச சமூகத்தை ஈர்க்குமென இரா.சம்பந்தன், ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்தியைப் பார்த்து சிரிப்பதா அழுவதா எனத் தெரியவில்லை.

அவர் நினைத்திருந்தால் யுத்தத்தையும் தடுத்து நிறுத்தி, விடுதலைப் புலிகளையும் ஜனநாயக அரசியலில் ஈடுபட வைத்திருக்கலாம். அப்படி ஒரு சூழ்நிலை அந்தக் காலகட்டத்தில் இருந்தது.

விடுதலைப் புலிகள் அழிந்தால் தமிழ் மக்களும் அழிவார்கள் என்ற விடயம் இரா.சம்பந்தனுக்குத் தெரியாதா? தமிழ் மக்கள் எவ்வளவு பேர் அழிந்தாலும் பரவாயில்லை விடுதலைப் புலிகள் அழிந்தால் போதும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு செயற்பட்ட அவர், இன்று ஐ.நாவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க முயற்சிக்கின்றார்.



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அத்தனை அழிவுகளுக்கும் முக்கியமாக இரா.சம்பந்தனும் மற்றும் ஒருவரும் பொறுப்புக் கூற வேண்டும். யுத்தக் குற்றங்களுக்காக விசாரிக்கப்பட வேண்டிய முதல் குற்றவாளிகளும் இவர்களே.

ஏனெனில் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளோடும், இலங்கை அரசோடும், நடுநிலை நாடுகளோடும் சமரசத்துக்கான பேச்சுகளை ஆரம்பிக்காது, விடுதலைப் புலிகள் மூலம் வெற்றி பெற்ற 22 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு, யுத்த அழிவுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட சர்வகட்சி கூட்டங்களில் கலந்து கொள்ளாது சம்பந்தன் தவிர்த்தார்.

இதேவேளை பிரித்தானிய நாடாளுமன்றக் குழு இலங்கை வந்தபோது இந்திய தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக ஒரு மிகப்பெரிய அனர்த்தம் நடக்கப் போகின்றது என்று கூறி, மெதுவாக நழுவிக் கொண்டார். யுத்த காலத்தில் அவரின் குழுவில் குறைந்தது 12 உறுப்பினர்களை வெளிநாட்டுக்கு சுற்றுலா அனுப்பிவிட்டு தற்போது இப்படியான ஒரு செய்தியை வெளியிட வெட்கம் இல்லையா அவருக்கு? நான் அவரை கேட்க விரும்புகின்றமை யாதெனில் அவரின் உறுப்பினர்கள் அனைவரினதும் தொலைபேசிகள், யுத்த கால இறுதி நாள்களில் இயங்கவில்லை என்ற கூற்று உண்மையா?

இலங்கை அரசின் இறுதி சர்வகட்சிக் கூட்டத்தில் இரா.சம்பந்தன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவரும் கலந்து கொள்ளவில்லை. அந்த நேரத்தில் நான் கலந்து கொண்டு இன்னும் மூன்று லட்சத்திற்கு மேல் மக்கள் உணவின்றித் தவிக்கிறார்கள் என்று கூறினேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை நடந்த, எதிர்க்கட்சித் தலைவர் கதிரையை அலங்கரித்த தேசிய அரசாங்கத்தில், யுத்தத்தை நடத்தி முடித்த, வெள்ளைக் கொடி விவகாரத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டிய சரத்பொன்சேகாவுடன் கூடிக் குலாவித் திரிந்தபோது யுத்தத்தில் என்ன நடந்தது என்ற விவரங்களை அவரிடம் கேட்டுப்பெற்று அந்தக்கால கட்டத்தில் நடந்த ஐ.நா. மனித உரிமை மாநாட்டுக்கு அனுப்பக்கூடிய ஓர் அறிக்கையை ஏன் சமர்ப்பிக்கவில்லை

இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி விட்டு சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் அந்த அறிக்கையை தயாரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்த முடியாது!

## பிரித்தானியா திட்டவட்டம்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் போதுமான ஆதரவு இல்லாதமையால் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐ.சி.சி.) பாரப்படுத்த முடியாது என பிரித்தானியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு கோரி 13 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட கையொப்பங்களுடன் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு பதிலளிக்கும் விதமாக பிரித்தானியா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சியை நிறுவிய ரோம் சட்டத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை என்றும் ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் மூலம் மட்டுமே நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க முடியும் என்பதுடன் அத்தகைய பரிந்துரையை வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகளே செய்யலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் இடைக்கால நீதிக்கு அரசாங்கம் உறுதிபூண்டிருப்பதாகக் கூறினாலும், பிரித்தானியா தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

அதன்பிரகாரம் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுக்களையும் விசாரித்து வழக்குத் தாக்கல் செய்ய இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா தொடர்ந்தும் அழைப்பு விடுக்கும் என்றும் அறிவித்துள்ளது.

மேலும் இலங்கையில் நிகழும் அனைத்து மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்கும் ஒரு விரிவான பொறுப்புக் கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை பிரித்தானியா வலியுறுத்தும் என்றும் அறிவித்துள்ளது.

# பிரதமரின் தலைமையில் களனியில் மகளிர் தினத்தில் ஆசீர்வாத பூஜை!





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆசீர்வாத பூஜை களனி ரஜ மஹா விகாரையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மகளிர் அமைப்பால் இந்த ஆசீர்வாத பூஜை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் போதி மரத்தடியில் வழிபாட்டில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து பிரதமரால் களனி தாதுகோபுரத்துக்கு ஒளியேற்றப்பட்டது. அதனை தொடர்ந்து ஆசீர்வாத பூஜை இடம்பெற்றது.

களனி ரஜ மஹா விகாராதிபதி பேராசிரியர் கொள்ளுபிடியே மஹிந்த சங்கரக்கித தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் ஆசீர்வாத பூஜையை நடத்தினர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மகளிர் அமைப்பின் நான்கு ஆண்டு நிறைவு, கொவிட் – 19 தொற்றால் பாதிக்கப்பட்டோர் விரைவில் குணமடையவும், இந்த தொற்று இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து இலங்கையர்களும் அதிலிருந்து பாதுகாப்பு பெறவும் வேண்டி இந்த ஆசீர்வாத பூஜை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆசீர்வாத பூஜையில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பிரசன்ன ரணதுங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மகளிர் அமைப்பின் தலைவரும் அமைச்சருமான பவித்ரா தேவி வன்னி ஆராச்சி, இராஜாங்க அமைச்சர்களான சிசிர ஜயக்கொடி, பிரசன்ன ரணவீர, நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னாண்டோ, சப்ரகமுவ மாகாண சபையின் தலைவர் கஞ்சன ஜயரத்ன, பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மகளிர் அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இரணைதீவில் ஜனாஸாக்களை புதைப்பதற்கு யாழில் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 09

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை இரணைதீவுப் பகுதியில் புதைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல தேவாலயங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம் பொஸ்கோ புனித திரேசா தேவாலயத்தில் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, முஸ்லிம்களின் உடல்களைப் புதைப்பது தொடர்பாக மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு, இரணைதீவு மக்களுக்குச் சரியானதொரு முடிவை வழங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.



இதேவேளை, இதே கோரிக்கையை முன்வைத்து முல்லைத்தீவின் தேவாலயங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்பு!

## முல்லைத்தீவில் கவனவீர்ப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களை இரணைதீவில் அடக்கம் செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத் தீவில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப்போராட்டங்கள் இடம்பெற்றன.

ஞாயிறு வழிபாடுகளின் பின்னர் ஆலயத்துக்கு வெளியில் கூடிய மக்கள், பதாதைகளைத் தாங்கியவாறு அமைதி முறையில் கவனவீர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

இஸ்லாமிய சமயத்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்குத் தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை எனவும், அடக்கம் செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட இடம் தொடர்பாகவே தமக்கு உடன்பாடில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சாத்தியமானதைப் பேசுவோம்!

தமிழர்களின் உரிமைப் போராட்ட பின்னடைவுகளுக்கு பிரதான காரணம் நடைமுறைச் சாத்தியங்களை மறந்து, யதார்த்தமற்ற, கற்பனாவாத சிந்தனையில் விடயங்களை நகர்த்த முற்படுவதாகும். காலங்காலமாக எமது தலைமைகள் இழைத்த தவறுகளில் இதுவும் பிரதானமாகும். கொள்கைகள், கோட்பாடுகள் பற்றி அதிகம் பேசும் நாங்கள் அவற்றின் நடைமுறைச் சாத்தியம் குறித்து அதிகம் சிந்திப்பதில்லை.

இப்போது கூட – ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் விவகாரத்தை ஒட்டியும் – அப்படித்தான நமது தரப்புகளின் சிந்தனைகள் செல்லுகின்றனவோ என்று தோன்றுகின்றது.

இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, உலகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. உலகெங்கும் நீதிக்காகப் போராடும் – ஈழத் தமிழர்கள் போன்ற – ஏதிலிகளின் போராட்டங்கள் நியாயத் தாராசில் போட்டு நிறுக்கப்படுவதுமில்லை. மனித உரிமைகள், யுத்தக்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றி எல்லாம் பேசும் உலக நாடுகள் எவையும் நீதி தேவர்களும் அல்லர்.

அது போன்றுதான், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும் நீதியை உரைத்துப் பார்க்கும் நீதிமன்றமும் அல்ல. நீதி, நியாயம், தர்மம் குறித்தும் அநீதி, கொடூரம், நியாய மீறல்கள் குறித்தும் அந்த மன்றில் அதிகம் எடுத்துரைக்கப்பட்டாலும், அவற்றின் அடிப்படையில் மட்டும் நீதி, நேர்மையாகத் தீர்மானம் எடுக்கும் அவை அல்ல அது. நீதி பற்றி அங்கு பேசப்படலாம்; நியாயம் குறித்து அங்கு எடுத்துரைக்கப்படலாம். ஆனால் கவுன்ஸிலின் முடிவு – அல்லது தீர்ப்பு – அல்லது தீர்மானம் – அந்த நீதி, நியாயத்தின் அடிப்படையில் மட்டும் அமைவதில்லை. மாறி, மாறி கவுன்ஸிலில் இடம் பெறும் அங்கத்துவ நாடுகளின் அவ்வவ்கால அணி சேர்க்கைக்கு ஏற்ப முடிவுகள் எட்டப்படுமே தவிர, தனித்து, நீதி, நியாயத்தின் அடிப்படையில் அல்ல. இப்போது இலங்கை விடயத்திலும் அதுதான் நிலைமை.

இந்த யதார்த்தப் புரிதலுக்கு மத்தியில்தான் எமக்கு நாம் நீதியைத் தேடிக் கொள்ள வேண்டும்.

கவுன்ஸிலில் இலங்கையை ஆதரிக்கும் நாடுகள் எவையும், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கை யுத்தக்குற்றங்களிலோ, மனித உரிமை மீறல்களிலோ, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களிலோ ஈடுபடவில்லை என்பதன் அடிப்படையில் உத்தேச பிரேரணையை எதிர்க்கவில்லை. அல்லது மேற்குலகும், தமிழர் தரப்பும் சுட்டிக்காட்டுவது போன்ற குற்றங்களில் இலங்கைப் படைகள் ஈடுபடவேயில்லை என்று உறுதிப்படுத்தியதின் அடிப்படையில் இலங்கைப் பக்கம் அவை நிலை எடுக்கவில்லை.

மாறாக, உலக நாடுகளின் நாடாளுமன்றங்கள், சட்ட மன்றங்களில் அரசியல் கட்சிகள், கூட்டுகள் அணி சேர்ந்து செயற்படுகின்றமை போல, உலக அரசியலில் – சர்வதேச உறவாடலில் – நாடுகளுக்கு இடையிலான நிலைப்பாட்டில் தாம் அணி சேர்ந்த தரப்புகளின் அடிப்படையில் அவை பக்கம் சார்ந்து காரியமாற்றுகின்றன. அவ்வளவுதான்.

இந்த உலகக் கள யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அந்த நிஜத்தில் வாழ – நீதியைத் தேட – நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தனக்கு பதினைந்து நாடுகளின் ஆதரவு இருப்பதாக இலங்கை கூறினாலும் பத்து வரையான நாடுகளே வெளிப்படையாக இலங்கையை ஆதரிக்கத் தயாராக இருக்கின்றன என்பது தகவல்.

அதுபோல இலங்கைக்கு எதிராக பிரிட்டன் உட்பட்ட மேற்குலகு சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு இன்றைய நிலையில் பதினைந்து நாடுகளின் ஆதரவே உள்ளது.

இந்தத் தடவை இலங்கை விடயத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைக்கு ஆதரவாகவும், எதிராகவும் விழும் வாக்குகளை விட, வாக்களிப்பில் பங்கு கொள்ளாமல் நடுநிலைமை வகிக்கப்போகின்ற நாடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளே மதில் மேல் பூனையாகத்தான் இதுவரை உள்ளன.

இந்தப் பின்புலத்தில் இலங்கை தொடர்பான பிரேரணையை முன்மொழிந்து நகர்த்தும் பிரிட்டன், கனடா, ஜேர்மனி உட்பட்ட தரப்புகள், தங்களின் பிரேரணை கவுன்ஸிலில் தோற்றுப் போய், தங்களின் சர்வதேச இராஜதந்திரம் இலங்கை போன்ற – சீனா, பாகிஸ்தான், ரஷ்யா முதலிய நாடுகளுடன் அணி சேர்ந்த – தரப்புகளிடம் அடி வாங்கி, மூக்குடைபடுவதை எதிர்கொள்ளத் தயாரில்லை. இதுதான் யதார்த்தப் புறநிலைமை.

தமிழர் தரப்பு கோருவது போல இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும் என்ற பரிந்துரையை பிரேரணை நகலில் நேரடியாகக் சேர்ப்பதன் மூலம் ஏற்கனவே அல்லாடும் நிலையில் இருக்கும் ஆதரவுத் தளத்தை இழந்து, மூக்குடைபட்டு அடிவாங்கும் 'றிஸ்க்' எடுப்பதற்கு பிரிட்டன் உட்பட்ட தரப்புகள் தயாரில்லை.

அது மாத்திரமல்ல. ஐ.நா. கட்டமைப்பில் ஒரு நெறிமுறை உண்டு. ஐ.நாவின் ஓரங்கம் செய்யும் வேலையில் – பணியில் – இன்னொரு அங்கம் தலையிடாது. யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் தீர்மானத்தை எடுக்க வேண்டியது ஐ.நா. பாதுகாப்புச் சபை. அதைச் செய்யும் படி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் பாதுகாப்புச் சபையை நேரடியாகக் கோர முடியாது; கோராது. தேவையானால் இந்த இலங்கை விடயத்தை கவுன்ஸிலின் கவனத்துக்கு அனுப்பிய ஐ.நா. பொதுச் செயலாளருக்கு அதனை கவுன்ஸில் திருப்பியனுப்பலாம். இதுதான் நிலைமை. நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய விவகாரத்தில் இலங்கையின் பொய்மையை இந்தியா வெளிப்படுத்தியது!



## அஜித் பி பெரேரா கருத்து

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பு உண்மைக்குப் புறம்பானது என இந்தியா அறிவித்துள்ளதன் மூலம், கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபே குணவர்தனவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் தவறானது என்பது தெளிவாகிறது. ஏனைய முதலீட்டாளர்களுக்கான விலைமனு கோரல் எதுவும் இன்றி அதானி நிறுவனத்திற்கு மேற்கு முனைய அபிவிருத்தி வழங்கப்படுவதற்கான பின்புலம் யாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பினார். அவர் மேலும் கூறுகையில் -

கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு முனையத்தைப் போலவே மேற்கு முனையமும் அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும் கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியாவுடன் ஏற்பட்ட விரிசலால் தற்போது மேற்கு முனையத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது மேற்கு முனைய அபிவிருத்தியை அதானி நிறுவனத்துக்கு வழங்குவதற்கு இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகம் அனுமதியளித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார். எனினும் அவரால் கூறப்பட்ட விடயம் உண்மைக்குப் புறம்பானதென இந்தியா அறிவித்துள்ளது.

இதன் மூலம் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபே குணவர்தனவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தவறானது என்பது தெளிவாகிறது. மேற்கு முனைய அபிவிருத்தி ஏனைய முதலீட்டாளர்களுடனான விலைமனு கோரலின்றி அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அதானி நிறுவனம் உலகின் பல நாடுகளிலுள்ள நிறுவனங்களுக்கு இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ஒரு நிறுவனமாகும். இதன் காரணமாகவே இந்திய அரசாங்கம் இந்த விவகாரத்துக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், இலங்கை அரசாங்கமும் அதானி நிறுவனமும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது என்றும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜப்பான் இதுவரை தமது முதலீட்டாளர்களை அறிவிக்கவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது. இவ்வாறிருக்கையில் அவசர அவசரமாக அதானி நிறுவனத்துக்கு வழங்குவதன் பின்புலம் யாது? இவ்வாறு தான் கொழும்பு துறைமுகத்தின் தென் முனையம் மற்றும் அம்பாந்தோட்டை என்பவற்றுக்கு தாரை வார்க்கப்பட்டன. - என்றார்.

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் இரு இறுதி அறிக்கைகள் சபாநாயகரிடம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இரண்டு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கைகளை ஜனாதிபதியின் சட்டப் பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்தா ரோஹணதீர நேற்று (திங்கட்கிழமை) சபாநாயகரிடம் கையளித்ததுடன், இந்தச் சந்தர்ப் பத்தில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் உடனிருந்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரசாங்க அதிகாரிகள், அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் வழிவாங்கல்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இதில் ஒன்றாகும். இது மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

அத்துடன், 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றனவாகக் கருதப்படும் ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையும் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார் நாமல் விமானம் ஒன்றின் சேவை 45 நிமிடங்கள் தாமதம்!



அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பயணித்த விமானமொன்றின் சேவை, 45 நிமிடங்கள் தாமதப்படுத்தப்பட்டது என கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொள்வதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு துறை அதிகாரிகளுக்கு, நீதிமன்றம் விதித்த பயண தடையை நீக்குவது தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இதனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைச்சர் நாமல் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளை சுமார் 45 நிமிடங்கள் தாமதப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றம், நாமல் ராஜபக்ஷ மீது இரண்டு பயண தடைகளை பிறப்பித்திருந்தது. இவை இரண்டும் கடந்த 4 ஆம் திகதி நீக்கப்பட்டன.

இதனை நீதிமன்ற பதிவாளர் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறைக்கு தபால் மூலம் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் அமைச்சர் நமல் ராஜபக்ஷ, வெளிநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொள்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றிருந்தார்.

குறித்த தருணத்தில், கட்டுநாயக்க விமான நிலையம், நீதிமன்றம் இரத்து செய்திருந்த உத்தரவைப் பெறவில்லை. இதனால் அதிகாரிகள், நாமல் ராஜபக்ஷவை வெளிநாடு செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு துறை அதிகாரிகளுக்கு தொடர்புகொண்டு, நாமலுக்கு பயணத்தடை நீக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அறிவித்தார்.

அதன் பின்னர், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினருடன் எமிரேட்ஸ் விமானம் காலை 10.45 மணியளவில் டுபாய்க்கு காட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காணாமற்போன உறவுகளின் சங்கம் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் போராட்டம்





சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் 6ஆம் நாளான நேற்று (திங்கட்கிழமை), சர்வதேச மகளீர் தினமாகையால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு – மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலிலேயே இந்த போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தில் சங்கத்தின் உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொலிஸார், நீதிமன்றத் தடையுத்தரவு தொடர்பில் தெரியப்படுத்தி நீதிமன்ற தடையுத்தரவை வழங்க முற்படுகையில், பெயர் குறிப்பிட்டவர்கள் அந்த இடத்தில் இல்லாமையால் பொலிஸார் அங்கிருந்து சென்றனர்.

இவ்வாறு பொலிஸார் வருகை தந்து, தடையுத்தரவை வழங்க முற்பட்டபோது அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்பட்டதைக் காண முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தில், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி பெண்கள் எத்தனையோ பேர், கண்ணீருடன் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனமெடுத்து செயற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

## ஞாயிறு பொலிஸார் அதிரடி சுற்றிவளைப்பில் 50 பேர் கைது!

மினுவாங்கொடை மற்றும் உஹண ஆகிய பிரதேசங்களில் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் போதைப் பொருள் , சட்ட விரோத மதுபான உற்பத்தி, காடழிப்பில் ஈடுபட்டமை என்பவை தொடர்பில் 50 இற்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

மினுவாங்கொடை பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சட்ட விரோத மதுபான உற்பத்தி தொடர்பில் 13 சந்தேகநபர்களும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 34 சந்தேகநபர்களும் , சட்ட விரோத போதைப்பொருள் தொடர்பில் 5 சந்தேகநபர்களும் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் உள்ளிட்ட 53 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 12 மணித்தியாலங்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உஹண பொலிஸ் பிரிவில் ஞாயிறு இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கன ரக இயந்திரங்களைப் பயன்படுத்தி காடழிப்பில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து இரு கனரக வாகனங்களும் டிரக்டர் இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கை பொலிஸாரால் போதைப்பொருள் தொடர்பான கண்காணிப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையைப் போலவே, சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்க முடியும்.

## இந்தியாவிடமிருந்து தடுப்பூசி பெறுவதில் தாமதம் ஏற்படுமானால் மாற்றுவழிகள்!

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து தடுப்பூசிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுமாயின் இரண்டாவது முறையாக தடுப்பூசியை செலுத்துவதற்காக மாற்றுவழிகளில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியுமென பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்தில் அண்மையில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக இலங்கை பதிவு செய்திருந்த வகையில் தடுப்பூசிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்ட ஹேமந்த –

தற்போது இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள தடுப்பூசிகளில் 7 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள தடுப்பூசிகள் தற்போது சுகாதார தரப்பின் வசம் உள்ளன. இந்த நிலையில் இரண்டாவது முறையாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் தடுப்பூசி செலுத்த வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் குறித்த நிறுவனத்திடம் இருந்து தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுமாயின் அதே தயாரிப்பை வேறு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும் இரண்டாவது தடுப்பூசி செலுத்துவதில் பிரச்சினை ஏற்படாது. இரண்டாவது முறையாக தடுப்பூசி வழங்கும் காலம் வரும்போது தடையின்றி தடுப்பூசிகள் கிடைக்குமென நம்புகிறோம்' என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## சமூக வலைத்தளத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு துரித தீர்வை வழங்க நடவடிக்கை – கமல் குணரத்ன



இலங்கையில் புகழ்பெற்ற பெண்களின் நற்பெயருக்கு சமூக ஊடகத்தினூடாக ஏற்படுத்தப்படும் களங்கம் காரணமாக மன அழுத்தம் மற்றும் பிரச்சினைகளில் சிக்கியுள்ளவர்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம் என பாதுகாப்பு செயலாளரும் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளருமான ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

மேலும், போர் வீரர்களை பராமரிக்கும் 'அபிமன்சல', ஆரோக்கிய விடுதி மற்றும் அங்கவீனமுற்ற போர் வீரர்களின் மனைவிகள் மற்றும் தாய்மார்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் ஆகியவற்றை மேற்கோள்காட்டிய ஜெனரல் குணரத்ன 'அத்தகைய பெண்மணிகளின் சகிப்புத்தன்மை மகத்தானது' என்று கூறினார்.

யுத்தத்தின் போது இத்தகைய மன அழுத்தம் மற்றும் துன்பங்களை தாம் எதிர் நோக்கியதாகவும் போர் வீரர்களின் தாய்மார்களுக்கும் மனைவிகளுக்கும் ஒட்டுமொத்த தேசத்தினது அன்பும் கௌரவமும் உள்ளதென உறுதியாக நம்புவதாக அவர் மேலும் கூறினார். அத்துடன் ஆணாதிக்க சமுதாயக் கட்டமைப்பிற்குள் கூட இலங்கைப் பெண்ணுக்கு பாரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையின் படகுகள் மூன்றை இந்திய காவல் படை கைப்பற்றல்!

அங்கீகரிக்கப்படாத தொலைதொடர்பு உபகரணங்கள் மற்றும் போதைப் பொருள்களுடன் மூன்று இலங்கை படகுகள் இந்திய கடலோர காவல்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு ஞாயிற்றுக்கிழமை திருவனந்தபுரத்தில் உள்ள விஜின்ஜாம் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என 'த இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

மொத்தமாக 19 நபர்களுடன் மார்ச் 5 ஆம் திகதி மினிக்காய் தீவிலிருந்து ஏழு கடல் மைல் தொலைவில் இந்திய கடற்பரப்பில் பயணித்த இந்த மூன்று இலங்கை படகுகளும் 'வராஹா' என்ற இந்திய கடற்படையினருக்குச் சொந்தமான கப்பல் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டன.



இதன்போது இந்திய காவல் படையினர் குறித்த மூன்றுபடகுகளையும் சோதனையிட்டபோது, அங்கீகரிக்கப்படாத தகவல்தொடர்பு உபகரணங்கள், போதைப்பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அதன் பின்னர் விரிவான விசாரணைக்காக படகுகள் ஞாயிற்றுக்கிழமை விஜின்ஜாம் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்தப் படகுகளிலிருந்து 200 கிலோ கிராம் ஹெரோயினும், 60 கிலோ கிராம் ஹாஷிஷ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளதாக காவல்படையினர் தெரிவித்துள்ளனர்.

## புலனாய்வுத் தகவல் கிடைத்தும் அமெரிக்காவால் பென்டகன் தாக்குதலை தடுக்க முடியவில்லை!

### இப்படி மைத்திரி ஒப்பீடு



அமெரிக்க புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்தபோதும் அவர்களால் பென்டகன் தாக்குதலைத் தடுக்க முடியாமல் போனதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்துருகிரிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், முழு உலகமும் அடிப்படைவாதம், தீவிரவாதம், இஸ்லாம் தீவிரவாதம் என்பவற்றுக்கு முகம் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

பாரிய வளமும் தொழில்நுட்பத்தில் பலம் பொருந்திய நாடுமான அமெரிக்காவிற்கு கூட செப்ரெம்பர் 11 தாக்குதல்களைத் தவிர்க்க முடியாமல் போனமை என மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

பென்டகனிலுள்ள பாதுகாப்பு தலைமையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் ஆயிரக்கணக்கான உயிர்களை பலியெடுத்த பின்லேடனின் தாக்குதல்களை தவிர்க்க முடியாமல் போனது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பின்லேடனின் தாக்குதல்கள் தொடர்பாகவும் அமெரிக்க புலனாய்வு பிரிவுக்கு இரு வாரங்களுக்கு முன்னரே தகவல்கள் கிடைத்திருந்த போதும் அமெரிக்காவால் அதனை தவிர்க்க முடியவில்லை என மைத்ரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

## மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கவில் 25 வீதம் பெண்!

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு 25 வீதம் வேட்புமனுக்கள் பெண் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று (திங்கட்கிழமை) கட்சி தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மாகாண ரீதியில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க மகளிர் பிரிவின் தலைவர் முன்வைத்த குறித்த திட்டம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் உள்ளூர் அரசியலில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் உறுதியாக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

# தீராத் தலைவலியாகத் தொடரும் சிறுவர்கள் மீதான கொடூரம்!

ந.லோகதயாளன்

வடக்கு மாகாணத்தில் தொடரும் மனித நேயம் அற்ற செயல்களினால் கடந்த வாரம் மட்டும் 5 சிறுவர்களின் உயிர்கள் இழக்கப்பட்டமையோடு ஒரு பாலகன் சித்திரவதைக்கு உட்பட்டுள்ளான். இந்தக் கொடூர – குரூர – போக்கு பல கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

இலங்கையில் சிறுவர்கள் மீதான கொடுமை அதிகரிக்கும் நிலையில் இது வடக்கு மாகாணத்திலும் அதிகரித்ததாகவே தென்படுகின்றது. இவ்வாறு சிறுவர் பாதிப்பு ஏற்பட்டதில் இந்த மாதம் அதிகம் உச்சரிக்கப்பட்டது வடக்கு மாகாணமாகவே உள்ளது .

இதில் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் 5 வீட்டுத் திட்டப் பகுதியில் வசிக்கும் தாயார் தனது பிறந்த தினத்தில் கணவருடன் ஏற்பட்ட தகராறின் காரணமாக தனது மூன்று பிள்ளைகளையும் ஆலயக் கிணற்றில் தூக்கி வீசிவிட்டுத் தானும் குதித்த சம்பவத்தில் 3 சிறுவர்களும் உயிரற்ற உடல்களாகவே கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்டபோதும் தாயார் உயிர் தப்பிக்கொண்டார்.




இதன்போது கிருத்திகா வயது 8, அட்சயா வயது 5, ரெனோஜன் வயது 2 ஆகிய சிறுவர்களே பெற்றெடுத்த கரத்தால் இக்கொடுமையை எதிர் கொண்டனர்.

> **வடக்கு மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு 118 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளதோடு மேலும் 23 முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. உடல் ரீதியாக 52 துன்புறுத்தல் களும், உள ரீதியாக 14 துன்புறுத்தல் களும் இடம்பெற்றுள்ளன. இக்காலத்தில் 21 சிறுவர்கள் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். இதன்போது 5 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்**

### பெற்றோரின் போட்டியின் பெயரால் சித்திரவதைக்கு உள்ளான சிறுவன்

யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தில் குவைத்தில் உள்ள கணவரிடம் இருந்து பணம் பெறுவதற்காக 08 மாதமே நிரம்பிய பெற்ற பிள்ளையைத் தாயே தாக்கும் வீடியோ ஒன்றை அந்தத் தாயே தயாரித்திருக்கின்றார். இதற்காகத் தாயே இரக்கமற்றுக் குழந்தையைப் போட்டுத் தாக்குகின்றார். இவ்வாறு தாக்கிய தாய் யாழில் தங்கியிருந்தாலும் அவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். குவைத் நாட்டில் தங்கியிருந்த சமயம் இந்தியாவைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவரைத் திருமணம் செய்துள்ளார். இதன் பிரகாரம் குவைத்தில் குழந்தை பிறந்த நிலையில் கடந்த இரு மாதங்களிற்கு முன்பு நாடு திரும்பி தற்போது மணியந்தோட்டம் பகுதியில் வாடகை வீட்டில் குடியிருக்கின்றார். கணவர் பணம் அனுப்பவில்லை என்ற விரக்தியில் அவர் இருந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதனால் குழந்தையை தாக்கும் வீடியோவை எடுத்து கணவரிற்கு அனுப்பி பணம் கோரும் நோக்கில் தாயார் குழந்தையை தாக்கும் சமயம் தாயாரின் உடன் பிறந்த சகோதரன் அதனை ஒளிப்படம் செய்துள்ளார். இதேநேரம் குழந்தையின் தாயின் தாயாரும் அருகில் இருந்துள்ளார். இந்த விடயம் நல்லூர்ப் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதனையடுத்து பிரதேச செயலாளரின் உத்தரவின் பெயரில் சிறுவர் நன்நடைத்தைதிணைக்கள அதிகாரி, சிறுவர் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி, பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோர் நேரில் சென்று, குழந்தையை தாக்கியதாயார், தாக்குதலை ஒளிப்படம் செய்து பணம் ஈட்ட உதவியர் மற்றும் அச் செயலிற்கு உதவியவர் என மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில், கிளிநொச்சி வைத்தியசாலை பின்புறத்தில் அப்துல்ர குமான் சயா என்னும் 07 வயதுடைய – பழைய கச்சேரி பின்புற வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியையுடைய – சிறுவன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அச்சிறுவன் உயிரிழந்தான். இந்தத் தாக்குதலை 17 வயதுச் சிறுவனே மேற்கொண்டிருந்தான்.

இந்த தாக்குதல்கள், விபரீதங்கள் அனைத்தும் பெரிய சம்பவங்களாக வெளிவந்தன. சிறிய சம்பவங்களாக வெளியே வராதவை ஆண்டு இறுதியில் சிறுவர் நன்நடத்தைத் திணைக்களத்தின் புள்ளி விவரத்தில்தான் கண்டுகொள்ளப்படுகின்றன.



### வன்முறைக்கு தற்கொலைகள்தான் தீர்வா?

இத்தனை துயரச் சம்பவத்திற்கும் மூல காரணமாகக் குடும்ப புரள்வு அல்லது குடும்ப வன்முறையே உள்ளது. இதேநேரம் குடும்ப வன்முறை அல்லது புரள்விற்கு தற்கொலை அல்லது கொலைதான் தீர்வு என்றால் நாள் ஒன்றிற்கு எத்தனை ஆயிரம் மரணங்கள் விழ வேண்டும்? அதனையாவது இவர்களுக்கு புரிய வைக்க வேண்டும்

இவ்வாறு வன்முறைகள், தற்கொலைகள், கோரத் தாக்குதல்கள் தொடர்பில் அவற்றைக் கட்டுப்படுத்த, மறுசீரமைக்க என்றே அரசினால் பல நிர்வாக அலகுகள், பல நூற்றுக் கணக்கான உத்தியோகத்தர்கள் இருந்தும் கட்டுப்படுத்தும் பணி என்னவோ மந்தமாகவும் – அதாவது வர முன் காக்கும் பணி இன்றி வந்தபின் எடுக்கப்படும் நடவடிக்கையாகவுமே – உள்ளது.


2020ஆம் ஆண்டில் மட்டும் வடக்கின் 5 மாவட்டங்களிலும் உள்ள 39 சிறுவர் இல்லங்களிலும் ஆயிரத்து 553 சிறுவர்கள் உள்ளமையோடு, 351 சிறுவர்களை மேலும் இணைப்பதற்கும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

### சிறுவர் வன்முறையின் புள்ளிவிவரங்களும் அதிர்ச்சியையே ஏற்படுத்துகின்றன

இதேநேரம் வடக்கு மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு 118 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளதோடு மேலும் 23 முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. உடல் ரீதியாக 52 துன்புறுத்தல்களும், உள ரீதியாக 14 துன்புறுத்தல்களும் இடம் பெற்றுள்ளன. இக்காலத்தில் 21 சிறுவர்கள் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். இதன்போது 5 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். பாடசாலைகளில் இருந்து இடை விலகிய 89 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 22 சிறு பராயத் திருமணங்களும் இடம்பெற்றுள்ளன.

2020 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களின் உத்தரவின் பெயரில் 120 சிறுவர்கள் இல்லங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். இருந்தபோதும் நல் உள்ளங்கொண்டவர்களால் 2020ஆம் ஆண்டில் சிறுவர் இல்லங்களில் இருந்து சட்டப்படியான வாரிசுகளாக 43 சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர் என்ற விவரங்களை வடக்கு மாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்களத்தின் புள்ளி விவரம் உறுதி செய்கின்றது.

இவ்வாறானவை பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் உள்ள அதே நேரம் பதிவு செய்யப்படாதவையும் இருக்கலாம் எனக்கருதப்படுவதோடு குடும்ப வன்முறையில் இருந்து பொருளாதார நெருக்கடி வரை ஏற்பட போர் தாக்கம் ஒரு காரணமாகவும் கூறப்படுகிறது.



Statistics - 2020

Department of Probation & Child Care - Nothern Province

| | Jaffna | Mullaitivu | Mannar | Vavuniya | Kilinochchi | Total |
|---|---|---|---|---|---|---|
| Sexual abuse | 56 | 13 | 9 | 16 | 24 | 118 |
| Attempt to sexual abuse | 7 | 0 | 6 | 2 | 3 | [illegible] |
| Physical abuse | 31 | 0 | 8 | 2 | 11 | 52 |
| Mental abuse | 9 | 1 | 3 | [illegible] | 1 | 14 |
| Attempt to suicide | 10 | 0 | 3 | 0 | 8 | 21 |
| Committed suicide | 3 | 0 | 2 | 0 | 0 | 5 |
| Neglected | 19 | 2 | 0 | 6 | 1 | 28 |
| Kidnapping | 4 | 0 | 0 | 0 | 2 | 6 |
| Trafficking | 1 | 0 | 2 | 0 | 0 | [illegible] |
| Threatening | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Dropout from school | 61 | 0 | 2 | 1 | 25 | 89 |
| Child Labour | 2 | 0 | 0 | 0 | 0 | 2 |
| Child early Marriage | 8 | 1 | 4 | 0 | 9 | 22 |
| Children Home admissions requested | 127 | 66 | 25 | 5 | 128 | 351 |
| No of children prevented | 106 | 19 | 8 | 0 | 90 | 223 |
| No of children institutionalized | 25 | 50 | 4 | 28 | 39 | 146 |

அதிகரித்த நாகரிக மோகம், போதைப்பொருள் பாவனை, தொலைக்காட்சிகள் என்பன இவற்றுக்கான காரணமாகக் கூறப்பட்டாலும் போதைப் பொருள் பாவனையே இதற்கான முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது.

இவை தொடர்பில் மகளிர், சிறுவர் விவகாரங்களுக்கு என்றே நூற்றுக் கணக்கான உத்தியோகத்தர்கள் மத்திய அரசின் கீழ் என்றும் மாகாண நிர்வாகத்தின் கீழ் என்றும் உள்ளனரே என பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் வினாவினால், முடிந்த வரை எவ்வளவோ பணி இடம்பெறுகின்றது, எத்தனை பேருக்கு உளநல மேம்பாடு, வாழ்வாதாரம் வழங்கப்பட்டன என்ற புள்ளி விவரத்தை நீட்டுகின்றனர்.

இவ்வாறு அனைத்து திணைக்களமும் செயல்படுகின்றன என ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் முதல் தடவை தற்கொலைக்கு முயன்றால் அதில் அவரது தவறே பெரும்பங்காகவும் இருக்கலாம். ஆனால் நூற்றுக் கணக்கானோர் 3 அல்லது 4 தடவை தற்கொலைக்கு முயன்ற பின்பும் மருத்துவ ரீதியாகக் காப்பாற்றி அனுப்பப்பட்ட பதிவுகள் மட்டும்தானே உள்ளது என்ற கேள்விக்கு பதில் அளிப்பார் யாரும் இல்லை.



# ஈழத்து மூத்த படைப்பாளி செ. கணேசலிங்கனுக்கு இன்று 93 ஆவது பிறந்த தினம்

## முற்போக்கு இலக்கிய உலகில் சிறந்த மனிதநேயவாதி அவர்

- முருகபூபதி -

இலங்கை வடபுலத்தில் உரும்பிராயில் 1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி பிறந்திருக்கும் கணேசலிங்கன் அவர்கள் தமது 93 ஆவது அகவைக்கு நகர்ந்துள்ளார்.

உரும்பிராய் கிராமத்தில் செல்லையா – இராசம்மா தம்பதியருக்கு இரண்டாவது புதல்வனாகப் பிறந்த கணேசலிங்கன், தனது ஆரம்பக்கல்வியை உரும்பிராயில் ஒரு கிறிஸ்தவ பாடசாலையிலும் அதனையடுத்து சந்திரோதய வித்தியாசாலையில் ஆறாம் தரம் வரையிலும் கற்றபின்னர், யாழ். பரமேஸ்வரா கல்லூரியில் மேற்கல்வியை தொடர்ந்தார்.

கணேசலிங்கன் அன்று கற்ற பரமேஸ்வராக்கல்லூரிதான் பின்னாளில் 1974 இல் யாழ். பல்கலைக்கழக வளாகமாக உருமாறியது. இந்தப்பல்கலைக்கழகத்தில் 1976 ஆம் ஆண்டு நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கு நடந்தபோது,




கணேசலிங்கனின் நாவல்களும் திறனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட நாவல்கள், பல சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சன நூல்கள், சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம் என நூறுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழ் இலக்கிய உலகிற்குத்தந்துள்ள கணேசலிங்கனின் தற்போதைய வயதிலிருந்து கணக்குப்பார்த்தாலும் வருடத்துக்கு ஒரு புத்தகம் என பிறந்தது முதல் இன்று வரையில் அதிகம் புத்தகங்கள் எழுதியிருக்கின்றார் இந்த அமைதியும் தன்னடக்கமும் மிக்க சாதனையாளர் என்ற முடிவுக்கு வரமுடியும்.

மூத்த தமிழ் அறிஞர் மு.வரதராசனும் (மு.வ) இவரது நெருங்கிய நண்பர். மு.வ. மறைந்தபின்பு அவரது நினைவாகவும் ஒரு நூலை எழுதியிருக்கின்றார். அச்சிலே வெளிவந்த இத்தனை நூல்களும் எத்தனை ஆயிரம் பக்கங்களைக்கொண்டவை என்ற ஆராய்ச்சியில் நாம் ஈடுபடத்தேவையில்லை.

செவ்வானம் நாவல் கைலாசபதியின் முன்னுரையுடன் வெளியானது. குறிப்பிட்ட நீண்ட முன்னுரையே பின்னாளில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற விரிவான நூலாகியது. இந்நூல் குறித்து விமர்சகர் வெங்கட்சாமிநாதன் 'மாக்ஸின் கல்லறையிலிருந்து ஒரு குரல்' என்ற சிறு நூலை எதிர்வினையாக எழுதினார். 1973 இல் பூரணி காலாண்டிதழ் இதனை மறுபிரசுரம் செய்தது. பேராசிரியர் நுஃமான் இதற்கு எதிர்வினையாக நீண்ட கட்டுரைத்தொடரை மல்லிகையில் எழுதினார். அதற்கு மு.பொன்னம்பலம் மல்லிகையிலேயே எதிர்வினை எழுதினார். இவ்வாறு ஆரோக்கியமான விமர்சன கருத்துப்பரிமாறல்களுக்கு வழிகோலிய மூலவர் செவ்வானம் படைத்த கணேசலிங்கன் என்பது இலக்கிய உலகின் பழையசெய்திதான்.

எனினும் இப்படியும் எமது தமிழ் இலக்கியப்பரப்பில் நிகழ்ந்திருக்கிறது என்ற தகவலையும் இச்சந்தர்ப்பத்தில், புதிதாக எழுதவந்துள்ள இளம் ஆக்க இலக்கிய வாதிகளுக்கும் இளம் விமர்சகர்களுக்கும் தெரிவிக்கின்றேன்.


சர்வதேசப்புகழ்பெற்ற கவிஞர் பாப்லோ நெருடா (இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்) இலங்கை வந்த சமயம் அவரை வரவேற்கும் எழுத்தாளர்களின் கூட்டத்திற்கு தலைமை தாங்கிச் சிறப்பித்த பெருமையும் கணேசலிங்கனுக்குண்டு.

புனா திரைப்படக்கல்லூரியிலும் அவர் சிறிதுகாலம் பயிற்சி பெற்றவர். அங்கு பிரபல இயக்குநர் மிருணாள் சென் போன்றவர்களுடன் நட்புறவுகொண்டவர்.

கமல்ஹாஷன் நடித்து பாலுமகேந்திராவின் இயக்கத்தில் வெளியான கோகிலா (கன்னடம்) திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகியாகவும் இயங்கியிருக்கும் கணேசலிங்கன் – தமிழக சினிமா உலகின் கோலங்களை தமது 'கவர்ச்சிக்கலையின் மறுபக்கம்' என்ற நாவலில் சித்திரித்துள்ளார்.

நான் வதியும் ஆஸ்திரேலியாவில் பல்கலைக்கழகப்பிரவேசப் பரீட்சைக்கு தமிழும் ஒரு பாடம்.

தமிழ்மொழிப்பாடப் பரீட்சைக்கு தோற்றும் பல மாணவர்களுக்கு பெண்கள் தொடர்பாக வரும் நேர்முக – எழுத்துப்பரீட்சைகளுக்கு கணேசலிங்கனின் பெண்ணடிமை தீர? என்ற நூல் உசாத்துணையாகப் பயன்பட்டது என்ற புதிய தகவலையும் இங்கு பதிவு செய்யவிரும்புகிறேன்.




இந்த நூலும், 'குமரனுக்கு கடிதங்கள்', 'குந்தவைக்கு கடிதங்கள்' முதலான நூல்களும் பல ஆயிரம்பிரதிகள் வாசகர் மத்தியில் சென்றுள்ளன.

சாரு மஜூம்தார் என்ற இந்திய சுதந்திர போராட்ட போராளி, பின்னாளில் இடதுசாரி இயக்கங்களில் ஈடுபட்டு, நக்சல்பாரி என்ற ஆயுதப்போராட்ட இயக்கத்தை உருவாக்கியவர்.

அவரது சிந்தனையின் தாக்கத்தினால், கணேசலிங்கன் எழுதிய 'மண்ணும் மக்களும்' என்ற நாவல் இந்திய அரசினால் தடைசெய்யப்பட்டது.

நிலமானிய சமூக ஒடுக்குமுறையைச் சித்திரித்தே மண்ணும் மக்களும் நாவலை எழுதினார். இலங்கையில் – புரட்சி ஏதோ ஒரு வடிவத்தில் தோன்றும் வாய்ப்பு நேரலாம் என்பதை நீண்ட காலத்திற்கு முன்பே நாவலாக எழுதிக் காண்பித்தவர்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் செ.கணேசலிங்கனின் சிறுகதைகள், நாவல்கள் பல முக்கியமானவை. தடம் பதித்தவை. 'ஆண்மையில்லாதவன்' போன்ற இவரது பல சிறுகதைகள் குறிப்பிடப்படவேண்டியவை.

நாவல்களிலும் 'சடங்கு', 'செவ்வானம்', 'நீண்ட பயணம்', 'மண்ணும் மக்களும்' போன்றவை முக்கியமானவை. இவரது நாவல்களை வெறும் பிரச்சாரப் படைப்புகளாக ஒதுக்கி விட முடியாது.

ட்ரோல்ஸ்ரோய், தாஸ்த்தாவஸ்கி போன்றவர்கள் தங்களது படைப்புகளில் கையாண்ட மத போதனைகளை வைத்து மட்டும் எவ்விதம் அவர்களது படைப்புகளைக் கணிப்பிட முடியாதோ, அவ்விதமே செ.கணேசலிங்கனின் படைப்புகளில் ஊடுருவியிருக்கும் பொருளின் தீவிரத்தை வைத்து மட்டும் அவரது படைப்புகளை எடை போட முடியாது.




இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் குமரன் பதிப்பகம் என்ற பெயரில் நூல் வெளியீட்டு நிறுவனத்தையும் நடத்திக்கொண்டு **Front Line** சஞ்சிகை ஆசிரியர் இந்து ராமின் நண்பராகவும் திகழ்ந்த கணேசலிங்கன், இந்து குழுமத்தின் நூலகத்திலும் சிறிது காலம் பணியாற்றினார்.

தமிழில் அரசியல் சார்ந்த நாவல்களை எழுதும் ஆற்றல் மிக்கவராக இனம் காணப்பட்டவர். மாக்ஸீய சிந்தனைகளினால் ஆகர்ஷிக்கப்பட்ட கணேசலிங்கன் சிறந்த மனிதநேயவாதி எனவும் விதந்து பேசப்படுபவர். ஆங்கிலத்திலும் நல்ல புலமைமிக்க கணேசலிங்கன், ஸ்ரிபன் செவாக் (**Stefan Zweig**) எழுதிய **Letter from an Un‡known Woman** என்ற குறுநாவலை தமிழில் 'அபலையின் கடிதம்' என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.




**StefanZweig** ஜேர்மனியில் மூத்த படைப்பாளி. இவர் 1881 இல் வியன்னாவில் பிறந்து 1942 இல் தமது 60 வயதில் பிரேசிலில் மறைந்தார்.

ஆனால் –அது இயற்கை மரணமல்ல. அவரும் அவரது மனைவியும் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டதாகவே இந்நாவலை தமிழுக்கு வரவாக்கிய கணேசலிங்கன் இந்நூலின் முதல் பதிப்பில் 1965 இல் பதிவு செய்துள்ளார்.

அதன்பிறகும் இந்த நாவல் இரண்டாம் பதிப்பில் வெளியாகியிருக்கிறது.

கணேசலிங்கனின் முதலாவது நாவல் நீண்டபயணம் வடமாகாண சாதி ஒடுக்குமுறையை சித்திரித்தது, மற்றுமொரு பிரசித்தி பெற்ற நாவலான சடங்கு பேராசிரியர் கா. சிவத்தம்பியின் முன்னுரையுடன் வெளிவந்து வாசகர்களின் கவனத்தைப் பெற்றது.

வெள்ளவத்தையில் இயங்கிய கணேசலிங்கனின் விஜயலக்ஷ்மி புத்தகசாலை 1983 ஆடிக் கலவரத்தில் முற்றாக எரிந்து நாசமாகியது. இலங்கையில் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் பெரிதும் உதவிய இந்தப் புத்தகசாலையை கொடியவர்களிடம் இழந்த போதிலும் – சென்னையில் புகலிடம் பெற்று, ஈழத்து படைப்பாளிகளின் நூல்கள் தொடர்ந்து வெளிவருவதற்கு அயராமல் உழைத்தார்.

கொழும்பில் நீண்டகாலம் குமரன் மாத இதழை நடத்தினார். அவ்விதழ் – கலை, இலக்கிய, அரசியல், அறிவியல் ஏடாக வெளியானது. இலங்கையில் மிகுந்த கவனத்தைப் பெற்ற கவிஞரான புதுவை இரத்தினதுரை ஒரு காலத்தில் வரதபாக்கியான் என்ற புனைபெயரில் பல கவிதைகளை எழுதியதும் இந்த குமரன் இதழில் தான்.

ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் – தான் குமரன் இதழ்களைத் தொடர்ந்து படித்தே அரசியல் அறிவு பெற்றார் என ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு ஜனாதிபதி நியாயமான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்!

## தேசிய பிக்குகள் முன்னணி வலியுறுத்தல்



உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பகுதிகளை நீக்க முயற்சிக்காமல், துரிதமாக நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய பிக்கு முன்னணியின் பொதுச் செயலாளர் வக்க முல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட கறுப்பு ஞாயிறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பெருமளவான இலங்கையர்களே உயிரிழந்துள்ளனர். அத்தோடு வாழ்நாள் முழுவதும் அங்கவீனர்களாக இருக்க வேண்டிய நிலைமைக்கு பலர் உள்ளாகியுள்ளனர். இவர்களுக்கான நியாயத்தை பெற்றுக் கொடுக்குமாறு நாம் பல முறை கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதன் பிரதிகள் பேராயருக்கும் மகாநாயக்க தேரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இந்த அறிக்கையில் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும்.

தாக்குதலுடன் தொடர்புடைய பலரது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பேராயரும் கவலை தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தின சம்பவத்தின் பின்னர் நியாயமான தீர்ப்பொன்றை பெற்றுக் கொள்ள முடியும் என்கின்ற எதிர்பார்ப்பில் பேராயர், தங்களது மக்களை முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட வேண்டாம் என்று கட்டுப்படுத்தியிருந்தார். எனவே, தற்போதைய ஜனாதிபதிக்கு இது தொடர்பான நியாயத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பாரிய பொறுப்புள்ளது.

எமது உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதற்காகவே நாம் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்கின்றோம். எமது இந்த எதிர்பார்ப்பு கூட நிறைவேற்றப்படவில்லை என்றால் அவ்வாறான ஆட்சியாளர்களை தெரிவு செய்வதால் என்ன பயன்கிடைக்கப் போகின்றது. அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதுடன் ஜனாதிபதி விரைந்து செயற்படுகின்றமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்த வேகத்தை உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பிலும் காண்பிக்க வேண்டும். அதனை விடுத்து அறிக்கை தொடர்பில் பரீசிலனை செய்வதற்காக என்று பொருத்தமற்ற நபர்களை நியமிப்பதால் காலம் கடத்தப்படுவதையே அவதானிக்க கூடியதாக இருக்கும்.

தாக்குதல் சம்பவத்துக்கு சர்வதேச தலையீடு,தேசிய தலையீடு காணப்பட்டதாகவும், ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றிக் கொள்வதற்காக சிலர் இந்த மரணங்களை பயன்படுத்திக் கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது. இதற்கான பதிலை அரசாங்கமே தெரிவிக்க வேண்டும். இதேவேளை இந்தத் தாக்குதல் தொடர்பில் நியாயமான தீர்வு கிடைக்கும் வரையில் நாம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

தொல்பொருள்பாதுகாப்புஅமைப்பின் தலைவர் உடஸ்கிரியே சபித்த தேரர் கூறுகையில் -

உயிர்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவம் அனைவரையுமே சோகத்தில் ஆழ்த்திய சம்பவமாகும். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான பொறுப்புதாரிகள் கைது செய்யப்படும் வரையில் நாடு சோகத்திலேயே இருக்கும். தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பேராயர் சிறந்த முறையில் செயற்பட்டிருந்தார். சம்பவத்துக்குப் பின்னால் இருக்கும் பிரதான நபர்களை அடையாளம் காணுவதற்காக சட்டத்திற்கு இடமளிக்குமாறு பேராயர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கான நியாயத்தை அரசாங்கம் பெற்றுக் கொடுத்துள்ளதா?. - என்றார்.

# கொரோனா எண்ணிக்கை கொழும்பில் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச்.09

கொழும்பில் கடந்த சில வாரங்களாக பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு நகராட்சி மன்றத்தின் தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர் தெரிவு செய்யப்பட்ட பொதுப் பகுதிகளில் எழுமாறான பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் சோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்தார்.

எனினும் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே தற்போது கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர் என சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளது எனக் குறிப்பிட்ட அவர், குறிப்பாக நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில், எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அனைத்து சுகாதார நெறிமுறைகளையும் பின்பற்றுமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

பெப்ரவரி முதல் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு நகரம் முழுவதும் நடத்தப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் சோதனைகளின் எண்ணிக்கை, தடுப்பூசிகள் செலுத்துவதற்கு தொடங்குவதற்கு முன்னர் நடத்தப்பட்டதைவிட குறைவாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதிக ஆபத்து உள்ள பகுதிகளில் சோதனை நடந்துகொண்டிருப்பதாகக் கூறிய அவர், மக்கள் தொகை அதிகம் உள்ள பகுதிகளில், ஒரு நோயாளி அடையாளம் காணப்பட்ட உடனேயே முதல் தொடர்புகள் பற்றியும் பரிசோதிக்கப்படுவதாகவும் பின்னர் இரண்டாவது மற்றும் மூன்றாவது தொடர்புகள் குறித்து பரிசோதிக்கப்படுவதாகவும் கூறினார்

# டிக்கோயாவில் மினி சூறாவளி; பல குடியிருப்புகளுக்கு சேதம்!





நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கலை மேற்பிரிவு தோட்டத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக அந்த தோட்டத்திலுள்ள 23 தொடர் மற்றும் தனி குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

கடும் காற்று காரணமாக இந்த தோட்டத்திலுள்ள 15 ஆம் இலக்க தொடர் குடியிருப்பின் கூரை காற்றால் அள்ளுண்டு சென்றுள்ளது. இதனால் இந்த குடியிருப்பில் 16 வீடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமையுடன் கூரைகளும் சேதமடைந்துள்ளன.

மேலும், குறித்த பகுதியில் பெரிய மரம் ஒன்று முறிந்து வீடுகளின் மேல் வீழ்ந்ததன் காரணமாக ஒருவீட்டின்பகுதியொன்றுமுற்றாக சேதமடைந்துள்ளதுடன் ஏனைய இரண்டு வீடுகளின் கூரைத்தகடுகள் சேதமடைந்துள்ளன.

அத்தோடு, அதே பகுதியில் அமைந்துள்ள மற்றுமொரு தொடர் மாடிக் குடியிருப்பில் ஒரு சில வீடுகளின் கூரை சேதமடைந்துள்ளன. குறித்த பகுதியில் சுமார் 50இற்கு மேற்பட்ட மரங்கள் மினி சூறாவளி காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மின் கம்பிகள் மீது மரங்கள் வீழ்ந்துள்ளதால், மின்சாரமும் துண்டிப்படைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு நேற்று காலை சென்ற நோர்வூட் பிரதேச சபையின் தலைவர், பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டமையுடன் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்க இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்து மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 10 ஆயிரத்துக்கு குறைவான பி.சி.ஆர். பரிசோதனைகள் மூன்று நாள்களில்!

கடந்த மூன்று நாள்களில் நாடு முழுவதும் 10 ஆயிரத்துக்கும் குறைவான பி.சி.ஆர். பரிசோதனைகளே மேற்கொள்ளப்பட்டன எனக் கொரோனா கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை 7 ஆயிரத்து 366 பி.சி.ஆர். பரிசோதனைகளும் சனிக்கிழமை 8 ஆயிரத்து 343 பரிசோதனைகளும் ஞாயிற்றுக்கிழமை 9 ஆயிரத்து 575 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 85 ஆயிரத்து 695 ஆகக் காணப்படும் அதேவேளை 502 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பித்ததிலிருந்து இதுவரை மொத்தம் 7 லட்சத்து 29 ஆயிரத்து 562 பேர் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

# ஈழத்து மூத்த...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தின் முன்னோடி முற்போக்கு எழுத்தாளர் அ.ந.கந்தசாமி அந்திம காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவருக்கு அருகே இருந்து பலவிதத்திலும் பணிவிடை புரிந்த முன்மாதிரியாளர் இந்த கணேசலிங்கன் தான்.

அ.ந.கந்தசாமி எழுதிய வாழ்வுக்கு வழிகாட்டும் உளவியல் நூலான 'வெற்றியின் இரகசியங்கள்' தமிழகத்தில் பாரி நிலைய வெளியீடாக வெளிவரக் காரணமாகவிருந்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பக வெளியீடாக வந்த அ.ந.கவின் மதமாற்றம் நாடகம் நூலாக வெளிவரவும் கணிசமான ஒத்துழைப்பு நல்கியமையோடு அந்நூலுக்கு நல்லதொரு முகவுரையினையும் எழுதியவர்.

அ.ந.க.வின் வெளிவராத நாவலான செ.க.வின் வசமிருந்த களனி வெள்ளம் 1983 ஆடிக் கலவரத்தில் செ.க.வின் எரிந்த உடமைகளுடன் எரிந்து போனதாகவும் அறியப்படுகிறது.

இலங்கையில் கார்ல்மார்க்ஸ் நூற்றாண்டு கொண்டாடப்பட்ட வேளையில் கணேசலிங்கன் வழங்கிய ஆக்கபூர்வமான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நேரடியாக கண்டதோழர் என். சண்முகதாஸன் அவரை மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

கணேசலிங்கன், பெண்ணடிமைத்தனத்திற்கு - திருக்குறள் விமோசனம் அளிக்கவில்லை என்பதை ஆய்வு மூலம் நிரூபிக்கும் நூல் ஒன்றையும் எழுதி விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தவர்.

பேராசிரியர்கள் க. கைலாசபதி, இந்திரபாலா உட்பட பல முன்னணி விமர்சகர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை பதிப்பித்துள்ள கணேசலிங்கனின் மிகப் பெரிய பலம் - அவரிடம் இயல்பாகவே குடிகொண்டுள்ள அமைதியும் அடக்கமும்தான்.

ஒருவகையில் அவர் ஒரு நிறைகுடம்.

கருத்தை இலக்கியத்தோடு மட்டும் வைத்துக் கொண்டு முற்போக்கு, பிற்போக்கு பேதமற்ற நட்புறவை சகல எழுத்தாளரோடும் கொண்டுள்ள ஒரு - சிலவேளை ஒரே - ஈழத்து எழுத்தாளர் இவர் - என்று இலக்கு இதழ் செ. கணேசலிங்கனைப் பற்றி பல வருடங்களுக்கு முன்னரே குறிப்பிட்டுள்ளது.

இன்று மார்ச் 09 ஆம் திகதி, தனது 93 வயது பிறந்த தினத்தை சென்னையில் தனது அருமை மகள் குந்தவையுடன் அமைதியாகக் கொண்டாடும் எமது இலக்கிய குடும்பத்தின் மூத்தசகோதரன் கணேசலிங்கனுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# புதுவிதமான அரசியல் கலாசாரம் ஒன்றை கட்டியெழுப்ப சிறுபான்மை முயலவேண்டும்!

## நஸீர் அஹமட் ஆலோசனை

தீவிரவாதப் போக்குகளை நாம் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்கின்ற ஒரு புதுவிதமான அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதைப்பற்றி சிறுபான்மையினர் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களில் ஒருவருமான நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் மரணித்தவர்கள் எனக் கூறப்படும் ஜனாஸாக்களின் நல்லடக்கத்துக்கு மட்டக்களப்பு பிரதேசம் தேர்ந்தெடுக்கப்பட்டமை தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் குறிப்பிட்ட அவர் -

சாணக்கியமான அணுகுமுறைகளை மேற்கொண்டு எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

விடாப்பிடியான அல்லது தீவிரவாத போக்குகளை நாம் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்கின்ற ஒரு புதுவிதமான அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதைப்பற்றி சிறுபான்மையினர் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

சிறுபான்மையினருக்கெதிரான கெடுபிடிகளை, நெருக்கடிகளை, புறக்கணிப்புக்களை எப்படி வெல்வது அல்லது தோற்கடிப்பது என்பது பற்றி அவசியம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு காய்நகர்த்தல்களைச் செய்து நாங்கள் இவற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

எனது அரசியல் வாழ்க்கையில் கடந்த நான்கு மாதங்கள் மிகவும் கனதி மிக்கவையாக இருந்தன. அரசியல் யாப்பின் இருபதுக்கு வாக்களித்தமை மற்றும் கொரோனா வைரஸ் மரணங்களில் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு விவகாரம் என்பன பேசுபொருளாகி விட்டது. அதனை வைத்தே அரசியல் அறிவில்லாத உலுத்தர்கள் அரசியல் செய்யத் தொடங்கி விட்டார்கள் நாங்கள் உறக்கமின்றி ஓடித் திரிந்து அடிமட்டத்திலிருந்து அதிகாரத்தின் அதியுயர் மட்டம் வரை தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுத்து வந்தோம்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாஸா அடக்கப்பட்ட இடத்தைக் கூட கடந்த டிசெம்பர் மாதம் நாங்கள்தான் அரசாங்கத்துக்கு தெரிவு செய்து கொடுத்திருந்தோம்.

இவையெல்லாம் திரை மறைவில் அழுத்தமாக ஆதாரமாக நுணுக்கமாக காய்நகர்த்தி அரசின் அனுசரணையோடு மேற்கொண்ட நடவடிக்கைகள். இவற்றுக்கான எழுத்து மூலமான ஆதாரங்கள் எம்மிடமுள்ளன.



எனவே இதில் வீணர்களின் கொக்கரிப்புக்களை நாங்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை.

இரணைதீவு இல்லையென்றாகி அடுத்து என்ன நடக்கும் என்பதற்குள்ளாகவே நாம் இங்கு ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் பணிகளை ஆரம்பித்து விட்டோம்.

ஆனால் இந்தக் காரியங்கள் ஒரே இரவில் நடந்தேறவில்லை. அதிகாரிகள் சகிதம் எத்தனையோ கள ஆய்வுகள் மேற்கொண்டு நிபுணர்களின் அறிக்கைகளைப் பெற்று கூட்டங்கள் கூடி முடிவெடுக்கப்பட்டதன் பின்னர்தான் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடிந்தது.

எனவே நாங்கள் ஒதுங்கி ஒளிந்து கொண்டோம் என்று கூறி அரசியல் செய்ய முற்பட்ட சில அறிவிலிகள் இப்பொழுது வாயடைத்துப் போய் நிற்கிறார்கள்.' என்றார்.

# மேல்மாகாணப் பாடசாலைகள் ஆரம்பிப்பதில் முடிவில்லை!



மேல் மாகாணத்திலுள்ள அனைத்து அரச மற்றும் தனியார் பாடசாலைகளும் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் முன்னர் அறிவித்தமை போல் எதிர்வரும் 15ஆம் திகதி கற்றல் நடவடிக்கைகளுக்காக மீளத் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான முதல்கட்ட கல்வி நடவடிக்கைகள் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம், எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொரோனா பரவல் காரணமாக பிற்போடப்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இதனால் முதலாம் தவணை கற்றல் செயற்பாடுகளை இரண்டு கட்டங்களாக முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வந்தோர் 22 பேருக்கு தொற்று!

கொழும்பு, மார்ச். 09

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய அதிகமான இலங்கையர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனக் கொவிட் - 19 தடுப்புக்கான தேசியசெயற்பாட்டுமையம்தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24மணிநேரத்தில்இலங்கையில் கண்டறியப்பட்ட 359 பேரில் 22 இலங்கையர்கள் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகள் ஞாயிறு மட்டும் 9 ஆயிரத்து 575 பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொண்டமையை அடுத்து, இவர்களைத்தவிர்த்து நாட்டின்பல்வேறு பகுதிகளிலிருந்து 337 கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

அவர்களில் 77 பேர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என கொவிட் - 19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பு மாவட்டத்தில் 74 பேர், காலி மாவட்டத்தில் 34 பேர், நுவரெலியா மாவட்டத்தில் 18 பேர், யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட் டங்களில் 17 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் பதுளை மாவட்டத்தில் 10 பேர், இரத்தினபுரி மாவட்டத்தில் 15 பேர், மொனராகலை மாவட்டத்தில் 13 பேர், கேகாலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 12 என்ற அடிப்படையில் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 09 பேர், அனுராதபுரம் மாவட்டத்தில் 08 பேர், களுத்துறை மாவட்டத்தில் 07 பேர், புத்தளம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தலா 06 பேர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கண்டி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் ஞாயிறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் மொத்தமாக 85 ஆயிரத்து 694 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ஆயிரம் கோடி ரூபா மோசடி சீனி இறக்குமதியில் மட்டும்!

## ருவான் போட்டுத் தாக்கு



மத்தியவங்கி பரிவர்த்தனைகள் நிறுத்தப்பட்டுள்ள போதும் தற்போதைய அரசாங்கம் விசாரணையை ஆரம்பிக்கத் தவறிவிட்டது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நடவடிக்கை தற்போது சீனி இறக்குமதியில் ஆயிரம் கோடி ரூபா மோசடிக்கு வழிவகுத்தது என அந்தக் கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மத்தியவங்கி முறிகல் மோசடி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போது குறித்த பரிவர்த்தனையை ரணில் விக்ரமசிங்க நிறுத்தி வைத்தார்.

இந்நிலையில் பத்திரங்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிதிகளும் இன்றுவரை மத்திய வங்கியில் இருக்கின்றன என ருவான் விஜேவர்தன குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், சீனி இறக்குமதியில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக இதேபோன்ற நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

கீரை அதிக அளவு ஊட்டச்சத்துக்களைக் கொண்டிருப்பதால் மிகச் சிறந்த சூப்பர்ஃபுட்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இருப்பினும், இது அதிக அளவு ஈரப்பதத்தைக் கொண்டிருப்பதால், அதன் அமைப்பு மற்றும் சுவையை இழக்க வாய்ப்புள்ளது. அதன் அடுக்கு வாழ்க்கையை மேம்படுத்த, இது நீரிழப்பு மற்றும் தூள் வடிவத்தில் பதப்படுத்தப்படுகிறது, இது அதன் சேமிப்பு மற்றும் போக்குவரத்தை எளிதாகவும் சிக்கனமாகவும் செய்கிறது.



கீரை தூள் அதன் தனித்துவமான ஊட்டச்சத்து உள்ளடக்கம் காரணமாக உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருகிறது. இதில் ஃபிளாவனாய்டுகள் மற்றும் கரோட்டினாய்டுகள் நிறைந்துள்ளனஇ மேலும் இதில் எந்த கொழுப்பும் இல்லை. உலகளாவிய பழம் மற்றும் காய்கறி தூள் சந்தையில், அதன் ஆக்ஸிஜனேற்ற எதிர்ப்பொருள்களின் செழுமை மற்றும் ஆண்டிமைக்ரோபியல் செயல்பாட்டின் காரணமாக கீரை தூளின் தேவை அதிகரித்து வருகிறது. உலகளாவிய பழம் மற்றும் காய்கறி தூள் சந்தையில், கீரை தூள் தேவைக்கு பெரும்பகுதி வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்து வருகிறது. கீரைத் தூளுக்கு அதிக தேவை இருப்பதால், முதலீட்டாளர்கள் எதிர்காலத்தில் அதிக வருவாயைக் காண்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# அநீதிகளுக்கு சர்வதேச நீதி வேண்டி யாழில் திங்கள் தீப்பந்தப் போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஏற்பாட்டில்







(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை அரசால் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, நீதி வேண்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் தீப்பந்தப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகம் மாணவர்களால் சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் யாழ்.நல்லூரில் மேற்படி தீப்பந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. சர்வதேச மகளிர் தினமான இன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இணைந்து இந்தப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அரசிடம் கையளிக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே?

## முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம்



முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் இன்றுடன் நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையிலும், சர்வதேச மகளிர் தினத்தையொட்டியும் இன்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு புனித இராஜப்பர் ஆலய முன் றலில் ஆரம்பமான இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு நிறைவடைந்தது .

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் தருணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதியை சர்வதேச சமூகம் விரைந்து வழங்க இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு கோரி யும், இன்று உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் அதனை கறுப்பு மகளிர் தினமாகப் பிரகடனம் செய்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்குத்தந்தையர்கள், அரசியல்வாதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சமூக மட்டப்பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டு கவனவீர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களால், உலகெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளில் தெருவில் கிடந்து அழ வைத்திருக்கின்றது இந்த அரசு. ஜனாதிபதியே! எமது பிள்ளைகளை நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஒப்படைத்தோம். கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இணை அனுசரணை வழங்கும் நாடுகள் இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த ஆதரவு நல்க வேண்டும். கோட்டா அரசே நீ கொண்டு போனவர்கள் எங்கே? இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு மரணச்சான்றிதழ் தான் பதில் என்றால் கொலையாளி யார்? தெற்கில் சுதந்திரம் வடக்கில் அடக்குமுறை போன்ற வாசகங்களுடன் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழியிலான நீண்ட பதாதைகளைக் கையில் ஏந்தி கண்ணீருடன் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை இராணுவம், புலனாய்வாளர்கள் மற்றும் சிவில் உடை தரித்த பொலிஸார் ஆகியோர் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் .

# பொறுப்புக்கூற வேண்டியவர்களே இப்போது கூச்சலிடுகின்றார்கள்!

## சாடுகின்றார் அமைச்சர் சமல்



2015ஆம் ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெறும் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பில் அழுத்தங்களின் காரணமாக பொலிஸாரால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாவனெல்ல சம்பவம் இடம்பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றிருக்காது. எவ்வாறாயினும் பொறுப்புக் கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிடுகின்றனர்.

- இவ்வாறு நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீது 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. எதிர்க்கட்சியால் இது தொடர்பில் மூன்று நாள்கள் விவா தம் கோரப்பட்டுள்ளது. அரசு அதற்கு தயாராகவுள்ளது. எவ்வாறிருப்பினும் பொறுப்புக்கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்கள் தாம் அறிந்தவற்றை ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் கூறியிருக்கலாம். அவ்வாறின்றி தேவையற்ற கருத்துக்களைக் கூறிக்கொண்டிருப்பது பிரயோசனமற்றது. எவ்வாறிருப்பினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கையைத் தொடர்ந்து முறையாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

2015ஆம் ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெறும் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பில் அழுத்தங்களின் காரணமாக பொலிஸாரால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாவனெல்ல சம்பவம் இடம் பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்காது. - என்றார்.

# 2024இல் ஐ.தே.க. ஆட்சியே மலரும் என ரணில் சபதம்!



ஐக்கிய தேசியக் கட்சியை 2024ஆம் ஆண்டு ஆட்சிக்குக் கொண்டு வருவேன் என்று அக்கட்சி யின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நகர்வுகள், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர் காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை அறிக்கையை ஏற்றுகொள்ளமாட்டேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 2022ஆம் ஆண்டு மார்ச் உள்ளூராட்சித் தேர்தல்?




உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

23 மாநகர சபைகள் உட்பட 335 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது.

குறித்த சபைகளின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரியில் முடிவுக்கு வருகின்றது. இந்தநிலையிலேயே தேர்தலை ஏப்ரல் மாதத்துக்குள் அதாவது மார்ச் மாதமளவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு கலப்பு முறைமையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றது. இதன்மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன், பெண் பிரதிநிதித்துவமும் கட்டாயமாக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையில் சில குளறுபடிகள் உள்ளன. இதனால் ஸ்திரமற்ற ஆட்சியும் அமைகின்றது. எனவே, சில திருத்தங்களுக்கு மத்தியிலேயே தேர்தல் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

# 12 வருடங்களைக் கடந்துசென்றுள்ள போதும் தந்தையின் கொலைக்கு நீதி கிடைக்கவில்லை!

## லசந்தவின் மகள் குற்றச்சாட்டு



சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும் நீதியை நிலைநாட்டுவதை இலங்கைத் தலைவர்கள் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றனர் என அவரின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க தெரிவித்துள்ளார்

அமெரிக்க பத்திரிகையொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி குறித்த பத்திரிகை வெளியிட்ட அஹிம்சா விக்ரமதுங்கவின் கட்டுரையில், லசந்த விக்ரமதுங்கவின் கொலை, அதன் பின்னர் இடம்பெற்ற விசாரணைகள் தொடர்பில் ஆழமாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தனது தந்தை, அனா பொலிற்கோவஸ்கியா, ஜமால் கஷோக்ஜி ஆகியோரின் கொலைகளைப் பார்க்கும்போது ஊடகவியலாளர்களை படுகொலை செய்கின்றமை உலகில் அதிகரித்து வரும் சர்வாதிகாரத்தின் மற்றுமொரு விம்பமெனத் தெரிவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செவ்வியில் இலங்கை பத்திரிகையொன்றின் செய்தி ஆசிரியராக பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி காலை தனது அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போது அத்திட்டிய பகுதியில் படுகொலை செய்யப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைப் பின்தொடர்ந்து, கொலை செய்தனர் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கொலை செய்யப்பட முன்னர், தனது காரிலிருந்த குறிப்பு புத்தகத்தில் தன்னை பின்தொடரும் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை, லசந்த விக்ரமதுங்க எழுதியிருந்தார் என விசாரணைகளின் போது தெரியவந்தது.

இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்று சில வாரங்களுக்கு பின்னர் சர்ச்சைக்குரிய மேலும் சில சம்பவங்கள் பதிவாகின.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் கடத்தப்பட்ட இரண்டு இளைஞர்களின் தீக்கிரையாக்கப்பட்ட சடலங்கள் அனுராதபுரம் கம்மிரிஸ் கஸ்வெள பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

அதன் பின்னர் லசந்த விக்மரதுங்கவை கொலை செய்வதற்கு வந்தனர் எனச் சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிளொன்று அத்திட்டிய சதுப்பு நிலமொன்றிலிருந்து மீட்கப்பட்டது.

விசாரணை இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் லசந்த விக்ரமதுங்கவின் சாரதியும் கடத்திச் செல்லப்பட்டமையுடன் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

கல்கிஸை பொலிஸார் முதலில் கிடைத்த தகவல்களின் பிரகாரம் விசாரணைகளை ஆரம்பித்தாலும் அது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவது தென்படவில்லை.

அதன் பின்னர், குற்றப்புலனாய்வு திணைக்களம் லசந்த விக்ரமதுங்கவின் கொலைச்சம்பவம் தொடர்பிலான விடயங்களை வெளிப்படுத்தி வந்த வேளையில், அந்த விசாரணை திடீரென பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு மாற்றப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தின் சிலரும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டாலும் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் உரிய சந்தேகநபர்கள் இதுவரை பெயரிடப்படவில்லை.

இந்நிலையில், சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் கல்கிஸை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் அவ்வேளையில் அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவிருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அந்த அதிகாரிகளும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் 3 அதிகாரிகள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஷானி அபேசேகர தற்போது விளக்கமறியிலில் உள்ளமையுடன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிசிர திசேராவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அரசியல் தஞ்சம் கோரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வா நாட்டிலிருந்து தப்பிச்சென்றார்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பிலான வழக்கு எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதி கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தமக்கு தொடர்ந்தும் நீதி கிடைக்காத நிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்சலெட்டிற்கு இது தொடர்பாக எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். – என அஹிம்சா விக்ரமதுங்க தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல்வாதிகளின் பாதை தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளது என்கிறார் டக்ளஸ்

தமிழ் அரசியல்வாதிகளின் பாதை தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளதாக கடற்தொழில் நீரியல் வளங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியா அரச விருந்தினர் விடுதியில் கடந்த (ஞாயிற்றுக்கிழ்மை) இடம்பெற்ற கட்சியின் உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

அரசாங்கத்தின் அமைச்சர்களுக்குத் தனிப்பட்ட நிலைப்பாடுகள் விருப்பு வெறுப்புகள் இருக்கலாம். ஆனால் அரசாங்கம் மாகாணசபை முறைமைக்கு மாறுபட்ட நிலைப்பாட்டை இன்னும் எடுக்கவில்லை.

தேர்தல் அறிவிக்கப்பட்டமையின் பின்னரே மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பாக நாம் அறிவிக்கமுடியும்.

இன்று எமது மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் வகையிலான செயற்பாடுகளையே தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுத்துவருகின்றனர். கோழி கூவி விடியாது. ஆனால் விடியும் நேரத்தைப் பார்த்து கோழி கூவும் போது மக்கள் மத்தியில் ஓர் அபிப்பிராயம் ஏற்படலாம். பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக வைத்திருப்பதே தமிழ்த் தரப்புகளின் எண்ணம்.

அவர்களின் பாதை தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. அன்று நான் சொன்னமையைக் கேட்டிருந்தால் இந்த இழப்புகளும் அழிவுகளும் வந்திருக்காது. நாம் சரியாக தான் பயணிக்கிறோம். எமது கருத்துக்கள் போதியளவு மக்கள் மத்தியில் செல்லவில்லை. அதுவே எங்களுடைய குறைபாடு. அப்படி சென்றிருந்தால் இழப்புகள் குறைந்திருக்கும்.



தமிழ்மக்கள் முள்ளிவாய்க்காலுக்கே சென்றிருக்கவேண்டிய தேவை வந்திருக்காது. எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாங்களும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

தேசிய நல்லிணக்கத்திற்கூடாகவே இந்த பிரச்சினையை தீர்க்க முடியும். அந்த இலக்கை நோக்கிய கொள்கைகளை ஏற்படுத்தி தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறோம்.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் எமது கடற்படையை விமர்சித்து, இந்தியக் கடற்றொழிலாளர்கள் தமிழர்கள் என்றபடியால் தான் கொல்லப்பட்டார்கள் என்ற ஒரு பொய்யான ஒன்றை, விளக்கம் இல்லாமல் சொல்லியிருந்தார்கள்.

ஆனால் 1971, காலப்பகுதியில் அரசிற்கெதிராக ஆயுதம் தூக்கியது மக்கள் விடுதலை முன்னணி. அதில் அங்கம் வகித்தவர்கள் அனைவரும் சிங்கள இளைஞர், யுவதிகள் தான். அவர்களையும் தமிழர்கள் என்றா கொன்றது? இல்லையே. அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தூக்கியமையால் அடக்கப்பட்டார்கள்.

எனவே மக்கள் என்னை ஏற்றுக் கொண்டு அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் தந்தால் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயத்தை செய்துகாட்டுவேன். செய்யாமல் நான் எதனையும் சொல்வதில்லை.

இந்த நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியமாக உள்ளது. அந்த வகையில் தீவுப்பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் சீன நிறுவனம் ஒன்றுக்குக் கிடைத்துள்ளது.

அது தற்செயலாக நடந்த ஒன்று. இந்தியாவும் அதற்கு விண்ணப்பித்திருந்தது. அதைத் தீர்மானித்தது அரசாங்கம் அல்ல ஆசிய அபிவிருத்தி வங்கியே. பூகோள அரசியலுக்காக அது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.– என்றார்.

---

## தேவையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்வு வழங்காது. எனவே, தேவையற்ற போராட்டங்களை தமிழ் மக்கள் உடனே நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு அரசின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் தற்போது ஜெனீவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போரின்போது தமிழ் மக்களுக்கு அநீதிகள் இடம்பெற்றிருந்தால் அதற்கான தீர்வுகளை அரசுதான் வழங்கும். அதை விடுத்து நாட்டின் சட்ட திட்டங்களை மீறி ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்ப்பது முட் டாள்தனமானது.

தமிழ் மக்களின் இந்தப் போராட்டங்களின் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகளும், புலம்பெயர் அமைப்பினரும் செயற்படுகின்றனர். இரு தரப்பினரும் தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக்குகின்றனர்.

அரசின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் தேவையற்ற போராட்டங்களை முன்னெடுப்பதை தமிழ் மக்கள் உடன் நிறுத்த வேண்டும் – என்றார்.

# மேல் மாகாணத்தில் 1,156 பேர் கைது!

மேல் மாகாணத்தில் கடந்த ஞாயிறு நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் 1,156 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 584 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனவும், ஏனையவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த ஞாயிறு நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஓட்டோக்கள் திருடப்பட்டுள்ளன எனத் தங்களுக்குப் பல முறைப்பாடுகள் வந்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருவிட்ட, எஹெலியகொட, களனி மற்றும் பல்லேகல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே நான்கு ஓட்டோக்கள் திருடப்பட்டுள்ளன என முறைப்பாடு வந்துள்ளது.

இதன் காரணமாக நகர்ப்புறங்களில் வாகனங்களை நிறுத்தும்போது பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்

---

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் சிகிச்சை பெற்ற குறித்த வயோதிபப் பெண் நேற்றுமுன்தினம் வீடு திரும்பியிருந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அவர் அண்மையில் சுகயீனம் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அதையடுத்து அவர் நொச்சியாகம கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் அவருடைய குடும்பத்தினரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் கோப்பாய் கொரோனாத் தடுப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நொச்சியாகமவில் சேர்க்கப்பட்டிருந்த குறித்த பெண்ணைப் பராமரிப்பதற்கு யாரும் இல்லாத சூழலில் குடும்பத்தார் சேர்க்கப்பட்டிருந்த கோப்பாய் வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

சிகிச்சை முடிந்து அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டே அவர் நேற்று முன்தினம் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். கொரோனா இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர் உயிரிழந்துள்ளார்.

எனினும், இது குறித்து மத்திய சுகாதார திணைக்களத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் முடிவின் அடிப்படையில் குறித்த மரணத்தை கொரோனா மரணமாக ஏற்றுக்கொண்டுள்ளோம். குறித்த வயோதிபப் பெண்ணின் சடலம் யாழ்ப்பா ணம் – கோம்பையன் மணல்மயானத்தில் மின்தகனம் செய்யப்பட்டது – என்றார்.

# காணாமற்போனோரின் உறவுகள் ஒன்றிணைந்து போராட வேண்டும்!




எமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து தாய்மார்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்ட ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் -

இன்று சர்வதேச பெண்கள் நாள். பல தாராளவாத விழுமியங்களையும் பெண்கள் தலைமையையும் இந்த உலகத்திற்கு கொண்டுவர கடுமையாக உழைத்த பெண்களுக்கு நாங்கள் மரியாதை செலுத்த விரும்புகிறோம்.

எமது தாய்மார்களின் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்றுடன் 1,480 ஆவது நாளைக் கடக்கின்றது. அது பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தங்கள் இலக்கை அடைவதற்கான மன வலிமையையும், உறுதிப்பாட்டுடனான, தன்னம்பிக்கை இருப்பதையும் காட்டுகிறது, உலக வரலாற்றில், வவுனியாவில் உள்ள இந்த தமிழ் தாய்மார்கள் 4 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்த போராட்டம் உலகசாதனையை படைத்து வருகின்றது. அவர்களின் போராட்டத்தில் அவர்கள் பெற்ற வலிமைக்கும் , அவர்களின் அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் நாங்கள் அவர்களை ஆசீர்வதிக்க விரும்புகிறோம்.

இந்த நாளில், இந்த உலகில், தலைமைப் பாத்திரத்தை வகித்த மற்ற பெண்களைக் குறிப்பிட விரும்புகிறோம். அந்தவகையில் முதலில் கமலா ஹரிஸைக் குறிப்பிட விரும்புகிறோம். அவர் வரலாற்றில் அமெரிக்காவின் முதல் பெண் துணைத் தலைவர் ஆவார். அவர் ஒரு தமிழ் தாயின் மகள்.

இரண்டாவதாக, தமிழகத்தின் முதல் பெண் முதல்வரான ஜெயலலிதாவுக்கு வணக்கம் செலுத்த விரும்புகிறோம். பதவியில் இருக்கும் போது ஈழத்தமிழருக்கு ஆதரவளித்த வெளிநாட்டுத் தலைவர் அவர். தமிழர்களுக்கான வாக்கெடுப்பைக் கோரியதும் இவர் தான். ஈழத் தமிழர்களை ஆதரிப்பதற்காக தமிழக சட்டசபையில் அவர் ஆற்றிய உரை மறக்கமுடியாதது, தமிழர்கள் நாங்கள் ஒருபோதும் அவரது பேச்சை மறக்க மாட்டோம்.

அடக்குமுறைகளை எவ்வாறு அம்பலப்படுத்துவது என்று எங்களுக்கு வழிகாட்டிய பூபதி அம்மாவின் தலைமையையும் நாங்கள் தலை வணங்குகிறோம்.

ஹிலாரி கிளிண்டன் அமெரிக்க வெளியுறவு செயலாளராகவும் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டதன் மூலம் பெண்கள் பல விடயங்களை சாதிக்க முடியும் என்பதை உலகுக்கு காட்டினார். அவர் தமிழர்களைப் பற்றி மிகவும் அக்கறை கொண்டிருந்தார்.

இலங்கையிலும் உலகின் பிற பகுதிகளிலும், இரக்கமற்ற போரை அம்பலப்படுத்த கடுமையாக உழைத்த பிரபல சர்வதேச செய்தி நிருபரே மேரி கொல்வின். இலங்கை இராணுவத்தால் கொல்வினின் ஒரு கண்ணில் பார்வை பறி போனது என்பதை நாம் நினைவூட்ட விரும்புகிறோம்.

அத்துடன் ஐ.நாவின் இரண்டாவது வரைவு நல்லதல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். இது வாக்கெடுப்பு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் ஐ.நா. அமைதி காக்கும் படை ஆகியவற்றை சேர்க்கத் தவறிவிட்டது.

அத்துடன் எமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து தாய்மார்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. காணாமல்ஆக்கப்பட்ட தமிழர்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் உதவி தேவை. - என்றனர்.

# சம்பிக்க உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு மே 31 இல்!





கொழும்பு, மார்ச். 09

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை 2021 மே 31 ஆம் திகதி எடுத்துக் கொள்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

சம்பிக்க ரணவக்க மற்றும் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள உதவி பொலிஸ் அத்தியட்சர் சுதத் அஸ்மடல, சம்பிக்கவின் சாரதி திலும் குமார ஆகியோரே மேற்கண்ட மூவர் ஆவர்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ராஜகிரிய பகுதியில், கடந்த 2016 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பயணித்த வாகனம் விபத்திற்குள்ளானதில், சந்தீப் சம்பத் எனும் இளைஞர் ஒருவர் காயமடைந்த விவகாரத்தில், சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் இரு குற்றப் பத்திரிகைகள் ஊடாக இரு வேறு வழக்குகளை தாக்கல் செய்திருந்தார்.

ஒரு வழக்கில் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மட்டும் பெயரிடப்பட்டுள்ளதாகவும் மற்றைய வழக்கில் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் சுலக்ஸனின் 28 ஆவது ஆண்டு ஜனன தின நினைவஞ்சலி!



யாழ்ப்பாணம், மார்ச் 09

கடந்த 21.10.2016ஆம் ஆண்டு பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களான வி.சுலக்ஸன், ந.கஜன் ஆகியோரில் சுலக்ஸனின் 28 ஆவது ஆண்டு ஜனன தின நினைவஞ்சலி நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள சுலக்ஸன், கஜன் ஞாபகார்த்த பஸ் தரிப்பிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டு, நினைவுச்சுடரை ஏற்றி வைத்தார்.

இதன்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி. தெற்கு பிரதேச சபை தலைவர் க.தர்ஷன் மற்றும் சுலக்ஸனின் குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களான சுலக்ஸன் மற்றும் கஜன் ஆகியோரின் நினைவாக, கல்வி ஊக்குவிப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஊக்குவிப்பு தொகை வைப்பிலிடப்பட்டு, வங்கி கணக்கு புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.




# இ.போ.ச. சாலை முகாமையாளருக்கு எதிராக மட்டு. ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு, மார்ச்.09

மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை சாலை முகாமையாளருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டு தெரிவித்து அவரை இடமாற்றக் கோரி சில ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை போக்குவரத்து சபை சாலைக்கு முன்னால் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சாலையில் கடமையாற்றும் ஊழியர்களால் நேற்றுக் காலை 6 மணிக்கு முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில், க.பொ.தர சாதாரண பரீட்சையில் தகுதியற்ற உதவி செயவாற்று முகாமையாளரை வெளியேற்று, மதவெறி முகாமையாளரே தங்களது அடியாள்களை சாலை வளாகத்தினுள் அடாவடித்தனம் புரிய இடமளியாதே, போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறும் பொம்மை ஒன்றும் கட்டப்பட்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த முகாமையாளர் கடந்த காலத்தில் இந்த சாலை முகாமையாளராகப் பணிபுரிந்து இங்கு இடம்பெற்ற மோசடி தொடர்பாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மீண்டும் முகாமையாளராகக் கடமையேற்ற நிலையில் இவருக்கு எதிராக ஒரு பகுதி ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இருந்தபோதும் இலங்கை போக்குவரத்து சபை கிழக்கு பிராந்திய பணிப்பாளரின் சிபாரிசில் தொடர்ந்து அவர் கடமையாற்றி வரும் நிலையில் மீண்டும் அவருடைய பல செயற்பாடுகள் தொடர்பாக ஊழியர்கள் குற்றச்சாட்டு தெரிவித்து அவரை இடமாற்றுமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர் எனவும் கிழக்கு பிராந்திய பணிப்பாளர் வந்து இதற்கான தீர்வு தரும் வரை தொடர்ந்து இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடம்பெறும் எனப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.2021 இல் வெளியிடப்பெற்றது.